ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ மகாபாரதத்தில் ஓர் பிரிவாகிய

கிருஷ்ணன் தூது நாடகம்



சூளை-முனிசாமி முதலியார் பாரியாள்
அம்மணி அம்மாளிடம்
சர்வ சுதந்திரம் பெற்று

இரத்தின[illegible]யகர் அண்ட் சன்ஸ்
அவர்க[illegible] திப்பிக்[illegible] பெற்றது.
சென்னை[illegible]

[illegible]] [ரூ. 1-50

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ மகாபாரதத்தில்

ஓர் பிரிவாகிய

கிருஷ்ணன் தூது நாடகம்

விநாயகர் துதி வெண்பா

பாண்டவர்க்காய்தூதுகதை பண்பாகபாடுதற்கு
ஆண்டவனேயுனைநாடி அடிதொழுதேன்—நீண்டமுகம்
தும்பிக்கையேந்தும் தோராதவிக்கினரே
நம்பினேன்முன்வாராய் நாதா.

விநாயகர் துதி விருத்தம்

சீர்பெரும்விநாயகர்சொன்ன செந்தமிழ்பாரதத்தில்
கார்முகில்மேனியோனும் காதலாய்தூதுபோன
பேர்பெரும்நாடகம்பாட பிழையொன்றும்வாராமற்றுன்
வாரணமுகத்தோன்நீயும் வந்தருள்புரிகுவீரே.

அம்மன் துதி

சங்கரிகெளரிமாரி சாம்பவியுனைத்துதித்தேன்
பொங்கரவத்தைநல்ல பூஷணம்பூண்டதாயே
திங்களின்முகத்தினளே தியானித்தேன் எந்தன்வாக்கில்
மங்கையேவந்துநிற்பாய் மலரடிபோற்றிபோற்றி.

சரஸ்வதி துதி

கஞ்சன்தன்னுவுதித்த காரணியுனைதுதித்தேன்
பஞ்சைமேல்கிருபைவைத்து பாரதக்கதைக்குமுன்னம்
நெஞ்சினிலுதையமாகி நிற்கவேவேண்டுமென்று
கொஞ்சினேனிப்போதெந்தன் கொலுவினில்நிற்பாய்வாணி.

விஷ்ணு துதி

பார்முழுதுண்டயெங்கள் பங்கயபாதாபோற்றி
சீர்பெரும்திருவையாற்றில் செழுக்கவைத்தவனேபோற்றி
மாரனையளித்தமெய்யா மாசிலாப்பொருளேபோற்றி
நேர்பெறவந்துகாரும் நெடுமாலேபோற்றிபோற்றி.

சிவன் துதி

கிரியைபோலுருவெடுத்து சேயூர்முடந்தரித்து
அரிவையென்காணுநின்ற ஆதியேசுந்தரேசா
நெறியதாய்நின்றுபாட நெஞ்சினில்வைத்தேனும்மை
கரியுரித்தவரேயிந்த கதையினை நடத்துவீரே.

கதை வணக்கம்

சபையிலுயர்சீர்பெற்ற சதுர்மறையோர்யாவருக்கும்
அபயமென்பவரைக்கார்க்கும் அரும்பெரியோர்கட்கும்
தவநெறியுணர்ந்தோர்க்கும் தங்குநற்குலவோர்கட்கும்
உபயபாதங்கள்தேடி யுமதடிபோற்றினேனே.

ஆக்கியோன் சிறப்பு

சீர்பெரும்தமக்கைவாழும் செழும்வைசியர்குலத்தில்
நேர்பெறவந்துதித்த நேயனுமுருகேசன்தான்
பாரதமுண்டோன்தூது பண்பாகபாடுதற்கு
தார்புகழ்சபையிலுள்ளோர் தாளினைபோற்றினேனே.

போற்றி தரு ரூபகம்

தேவதேவ தேவனே — நமோநமோ
தேவனே சுந்தரேசனே — நமோநமோ

ஆவலாகிதேடியுமது — அடிமைபோற்றினேன்
சேவற்கொடியோனையளித்த — சிவனேபோற்றினேன்
தேவா வா தேவனே — சுந்தரேசனே நீ வா

கஞ்சனுமுமைதேடிகாணு — கழலே தாருமே
பஞ்சாக்ஷரமூர்த்தியேயெனை பாதுகாருமே
இப்போ வாருமே தேவா — நீ வா

அண்டமட்டுநீ யோங்கிவளர்ந்த — ஆதிருபனே
கவலையைத் தாண்டயெங்கள் — சதாசிவமே
ஓம்பரை நிதமேதேவா — நீ வா

நரியைபரிய தாக்கிநின்ற — நாதாவேதமே
சிறியன்முருகன் தனக்குமது — சேவைதாருமே
சபைமேவ வாருமே — நீ வா

விநாயகர் வருகிற விருத்தம்

சோலைசூழ்தலங்கைவாழும் சுந்தரேசனீன்ற
ஆலிலையினடியில்மேவும் ஐங்கரஎழுந்திருந்து
மாலையும்தரித்ததிவ்ய மங்களகரமதாக
காலையின்கொலுவின்மிக்க கணபதியிதோவந்தாரே.

வசனம்

அகோதெப்படி யென்ருல், வியாசமகா முனிவரியற்றிய பாரதக் கதையில் கிருஷ்ணமூர்த்தி தூதுசென்ற கதையைஅடியேன் நாடகமாய்ப் பாடிவருவதால் அதற்காக விநாயகர் முன்னதாய் வருகிற விதங் காண்க.



விநாயகர் சொல் தரு ரூபகம்

கணபதியிதோவந்தார் தொந்திக்
கணபதியிதோவந்தார்

கணபதிகுணபதி யாகியதுணைபதி
தனபதியெங்கள் கணபதிவந்தார்

சண்டுபெருச்சாளி தன்னிலேறி
சகலபோகமும் யெங்கும்சவாரி
கண்டுதொழுதிட வேகமாய்மீறி
கருணையாகவே அவரைக்கோரி

சற்றன்மிக சுற்றின்குள
முற்றித்தரும் வெற்றிப்பெரும்-கண

சதுர்புஜமதுதுலங்க முகத்தில்
தந்தமும்ஒளித்திடவே யிலங்க
அதிவிதப்பணி மார்பிலங்க
அரையில்கிண்கிணி அசைந்துகுலுங்க

அய்யன் தும்பிக்கையன்
மெய்யன் சபையில்துய்யன்-கண

நினைத்தவரத்தைக்கொடுக்க மெய்யன்
நேயன்தலங்கைவாழ் வாசன்கணேசன்

அனைத்துலகமுங்கார்க்கும் நேயன்
அன்பாய்முருகனை ஆதரிக்குமீசன்

அடியேகதிதொழு தேன்முடிநெடுமால்
விடமுருகாவடி படுமாகணபதி-கண

கட்டியக்காரன் வருகிற விருத்தம்

தலையினில்கோணப்பாகை தானதுதரித்துநல்ல
பலபலவிருதும்பூண்டு பட்டாவும்டால்கள்மாட்டி
நிலைபெரும்தருமபுத்திரர் நெடுங்கொலுகார்க்கவல்லோன்
கலைமகள்பாதம்போற்றி நல்லகட்டியக்காரன்வந்தான்.

வசனம்

அகோ தெப்படியென்ருல் பாண்டவர்கள் பனிரெண்டு வருஷம் வனவாசஞ் சென்று ஒருவருஷம் அக்யாதவாசம் துலைந்து உபலாவியம் வந்தார்கள் தங்களுடைய நாட்டை கேழ்க்க வருவதால் அவர்களிட ஊழியன் சேர்வைக்காரன் வருகிற விதங் காண்க.

கட்டியக்காரன் சொல் தரு அடதாளம்

கெட்டிகட்டியக் காரனும்வந்தான்
தர்மவாசலைக் கார்க்கும் - கெ

கெட்டிகட்டியக் காரனும்வந்தான்
சட்டமாய்கொலு திட்டமாய்செய்திட
மட்டிலாப்புகழ் பாண்டவரிடம்
கட்டளைப்படி யெட்டுதிசையிலும் - கெ

தலையில்கோணப் பாகையுமாட்டி
கையினில்வெள்ளித் தடியும்கத்தியும்
யீட்டி நிலையா யங்கியும்
காலில்கச்சையும் நேர்மையாகவே
சீர்மை யோங்கிட - கெ

காடுசென்றவர் வருகிறுரென்று
உலகோர்க ளறியவே
தாளமேளசின்னங்கள் ஆர்பீடவேயிந்த
நாடுநகரமும் வீடுமுழுதிலும்
நாட்டியேகொடி காட்டியேவரும் - கெ

தழைத்துபெருகிய தலங்கை நகரினில்வாழ்
சுந்தரீசர்பாதம் சரணமென்றடிபோற்றியே
முருகன் இந்தக்கதையை யிந்தநூல்களில்

பொருக்கிப்பாடிஞன் சுருக்கமாயதை
பெருக்கம் செய்திடும் கெட்

கட்டியக்காரன் சொல் விருத்தம்

பாண்டவாள்வருகின்ருர்களே பார்மிசைசொன்னேன் சொன்னே
காண்டபர்வந்தாலெங்கள் கலியெலாந்தீரும்சொன்னேன் [ன்
வேண்டியதைநீங்கள் விருப்பமாய்கேளும்சொன்னேன்
முண்டகமணிந்தோர்பாதம் மேன்மையாய்பணிந்துசொன்னேன்

பொது விருத்தம்

பனிரெண்டுவருஷமாக பார்வனம்சென்றுமீண்டு
தனியராய்விராடதேசம் தங்கியேயிருந்துபின்பு
இனியதோருபாயத்தாலே யிருந்துமேகாலந்தள்ளி
கனிவாகநாட்டைக்கேட்க காதலாய்வருகின்ருரே.

பாண்டவர் சொல் தரு திரிபுடை தாளம்

ராஜனுகியபாண்டுராஜன் புதல்வரைவர்
ராஜர்கள்கொலுவாகிஞர்

பாண்டுபுதல்வர் கொலுவாகிஞர்
வாசவராகியதேவர் நேசமாய்துதித்தாட
காசும்கப்பணங்கொண்டு தேசமன்னர்கள்கூடராஜ

பகடையாடிமுன்தோற்று பாரவனம்தன்னேக்காத்து
விகடம்செய்தோரைப்பார்த்து வேறுக்கசேர்த்து ராஜ

மச்சநாட்டில்சென்று மன்றறியயின்று
ரைத்தநாட்டைக்கேட்க வந்தரசுயேற்க ராஜ

அக்ஷயபாத்திரம் அடவியில்பெற்றவர்
நிக்ஷயம்எப்போதும் நீங்காமலுற்றவர் ராஜ

காளிக்குமுன்சொன்ன கருத்தின்படிநடத்த
வாளும்கண்டும்வில்லும் வலுமையாய்பிடித்து ராஜ

களங்கமில்லாமலே காக்கும்தலங்கைவாழும்
துலங்கியசுந்தரேசர் தேவரைபோற்றி ராஜ

போற்றி விருத்தம்

மகிதலம்தன்னேரக்ஷிக்க மகேஸ்வராபோற்றிபோற்றி
பிழைகள்வாராமல்காக்கும் பித்தனேபோற்றிபோற்றி
ககனவட்டோங்கினின்ற கடவுளினடிகள்போற்றி
சுண்ணமாய்தலங்கைவாழும் சுந்தரயீசாபோற்றி.



துரோபதை வருகிற பொது விருத்தம்

கோகிலமொழியாள் திவ்ய கோதைபாஞ்சாலியாரும்
வேகமாயெழுந்திழுந்து விதவிதபணிகள்பூண்டு
மேகம்போலளகபாரம் மேன்மையாய்முடிக்கவேண்டி
தோகையும்கொலுவைநாடி துரோபதைதான்வந்தாளே.

துரோபதை சொல் தரு ஆதிதாளம்

சந்திரகுலத்துதித்த சுந்திரஐவர்கள்பாரி
செந்திருதுரோபதையும் வந்தாள்சபையைநாடி
செந்திருதுரோபதையும் வந்தாள்
இந்திரன் இந்திராணிமெச்சும் மந்தகாசனிகுணளி
விந்தையாம்ஐவரைத்தேட வந்தாளேசபையைநாடி சந்

உலகிலிவளுக்கிணை ஒருவரைசொல்லப்போமோ
உத்தமியிவளல்லாமல் மற்றொருத்தர்தகுமோ
அலைகடல்போல்திரண்ட அளகத்தையுடையவள்
அங்கஜன்பாணத்தை அடித்துத்துரத்தினவள் முடுகு

அன்னமுங்கண்டிவளை ஒண்ணியேநாடுமே
சின்னவனிவளிட செயலதைகோருமே
மன்னவனிவளிட மகிமையைப்பாரு
பன்னியேநூல்களும் இன்னியேதேடுமே

பாருலகோர்களும் சீர்பெறவேதொழும்
கார்முகில்மேனியோர் நேர்பதம்போற்றிடும்
காதலங்கிர்த ரூபசவுந்தரி
ரேகையணந்த விநோத அலங்காரி

ஆதியிலவதரித் தழகிய பெண்ரதி
சாதியதான மனோரதபெண்கிளி
துணையடியேகதி யிணையிவள் கோமதி
செப்புடுவற்புத நற்பெரும் கற்பகம்
சூழும்தலங்கையில் வாழும் சுந்தரேஸ
தேனேயென்றுதேடி ஆவலாய்நின்றுபாடி சந்திர

பீமன் சொல் விருத்தம்

எங்களையிதுவரைக்கும் யிடரிலாகாத்தகோவே
சங்கரனருளினாலே சகலகாரியமும்வென்றீர்
பொங்கமாயினிநடக்கும் புகழானவேலைக்காக
மங்களகரமாய்செய்யும் மன்னவாபோற்றிபோற்றி

வசனம்

சரணம் சரணம் அண்ணாவே இதுவரையிலும் எங்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் காத்து ரக்ஷித்தீர் இனி நடக்க வேண்டிய வேலைகளுக்கு யோசனை செய்யும் அண்ணாவே.

அர்ச்சுனன் சொல் விருத்தம்

உடலெடுத்திதுவரைக்கும் உயிர்க்குயிராகக்காத்த
கடலோசைபோலேயொத்தகடவுளே!அடியேன்சொல்வேன்
அடலானஉலகுக்கெல்லாம் அரசனாய்நீரும்நிற்க
மடல்போன்றபெருமைபெற்றமன்னவரேசெய்வாய்போற்றி.

அர்ச்சுனன் சொல் தரு அட தாளம்

வளையாதவில்லை வளைத்துமாலையிட்ட தேவியரை
அலைகுலையச்செய்து அவமானம்செய்தாரே அண்ணாவே

கபடமோசஞ்செய்து காதலாய்சூதாடி அண்ணாவே
அவகேடாக்கிநம்மை அடர்வனமோட்டினாரே அண்ணாவே

துஷ்டரைபாணத்தால் கண்டித்துயென்னிட அண்ணாவே
கொண்டபகைதீர ஆண்டவரேதயைசெய்யும் அண்ணாவே

ஏளனம்செய்திட்ட யிழிவானகர்ணனை அண்ணாவே
நாளைசமர்க்களத்தில்நான் கொல்லவேணுமே அண்ணாவே

பதினொருஅக்ரோணிபடைமன்னர்யாவையும் அண்ணாவே
அதிபரேயென்கையால் அதோகதியாக்குவேன் அண்ணாவே

அண்ணாபீமசேனர் அவர்செய்தசபதமும் அண்ணாவே
கண்ணாதம்பிமார் கருத்தைநிறைவேற்றும். அண்ணாவே

எப்போதும்ரக்ஷிக்க யெழிலானஆண்டவரே அண்ணாவே
கைப்பொருளாயிருக்க கலங்குவதேனிப்போ அண்ணாவே

துதிபெரும்தலங்கைவாழ் சுந்தரீசரைப்பணிவோம் அண்ணுவே
அதிபரேவுமக்கினி யாலோசனேயேனேயா அண்ணுவே

அர்ச்சுனன் சொல் வசனம்

கேளும் அண்ணுவே நாம் இனி சும்மா யிருக்கலாகாது நீர் பட்டாபிஷேம் பெறவும் நாங்கள் ஊழியம் செய்யவும் எங்களுடைய சபதமுடிக்கவும் யோசனே செய்யுமண்ணுவே.

நகுலராஜன் சொல் விருத்தம்

தந்தையும்தாயுமாகி தயவதாய்காத்தகோவே
கந்தமூலங்களான காய்கனிசரதபூண்டு
அந்தமாகிநாமும் அலேந்துமேவாடுரோமே
மைந்தன்மேல்கிருபைசெய்து மகிழ்பெறசெய்வாய்போற்றி.

நகுலராஜன் சொல் தரு அடதாளம்

இன்னம்சும்மாயிருந்தா லெப்படிமுடிக்கலாம் அண்ணுவே
மன்னர்றியமுன்புசொன்னசபதமுடிக்க அண்ணுவே

சபையில்துயிலுரிந்த சண்டாளப்பாவியை அண்ணுவே
அபயம்அபயமென அலரக்கொல்லுவதெப்போ அண்ணுவே

மயிரைப்பிடித்திழுத்த மாபாவிதன்னேநான் அண்ணுவே
கையால்குடல்பிடுங்கி நாட்டுவதென்றைக்கோ அண்ணுவே

தீண்டாதஅக்கினியைதீண்டி சபையில்விட்டான் அண்ணுவே
சண்டாளதுஷ்டனின் சதையைகொல்லுவதெப்போ அண்ணுவே

மன்னர்தேவரறிய சொன்னசபதமுடிக்க அண்ணுவே
இன்னம்சும்மாயிருந்தால் எரியுதேயென்மனம் அண்ணுவே

தர்மமேஜெயமென்று தயங்கியிருக்கின்றீர் அண்ணுவே
துன்மார்க்கமூடரை துண்டிக்கவேணுமே அண்ணுவே

உந்தன்முன்கூறின உரைதவராமமே அண்ணுவே
எந்தவிதமானுலும்எண்ணத்தை நிறைவேற்றும் அண்ணுவே

சகாதேவன் சொல் விருத்தம்

என்னேயேயிதுவரைக்கும் யெழிலாககாத்த அண்ணுவே
மன்னவரேயுமதுதிவ்ய மலர்பாதம்போற்றிசெய்வேன்
கன்னலேவிட்டுவேம்பு கனியிணேப்புசித்துவாழ்ந்தோம்
இன்னமும்பொசித்திடாமல் யெங்களேகாப்பாய்போற்றி.

வசனம்

சரணம் சரணம் அண்ணுவே அடியேன் சொல்லுவதை மன்னிக்கவும். அது என்னவென்ருல் கரும்பை விடுத்து வேம்புக்

கனியினை புசித்து வந்தோம். ஆகையால் இன்னம் அட்டி செய்யாமல் எங்களைக் கார்க்க வேண்டும் அண்ணாவே.

துரோபதை சொல் விருத்தம்

மன்னரே தருமபுத்ர மகிழ்குணா போற்றி போற்றி
சின்னவளும துபாதம் சேவடிமிகவே போற்றி
பன்னியநூலுணர்ந்த பராக்ரம பொருளே போற்றி
அன்னவள் விரித்தகூந்தல் அலையுதென் செய்வேன் போற்றி.

துரோபதை சொல் தரு—சிந்து

நாதா நானென்ன செய்வேன் எனது பிராண
நாதா நானென்ன செய்வேன்
வாதைபடுகின்றேன் மனது நொந்திதோயலைபுறேனே-நா

முரசுக்கொடிபடைத்த மன்னவரிட அரசியென்றேமதித்து
பாராமலென்னை துராசினம்செய்தாரையோ-நா

மாந்துளிர்மேனியெல்லாம் புழுதிபட்டென்கூந்தலலையுதையோ
அதைமுடிக்கவேந்தே தயைபாருமே-நா

பாவிதுரியனென்னை சபையில்சொன்னவாயில்
புழுநெரித்துரணகளத்தில் ஆவியழிவதெப்போ-நா

மங்கைபங்காளரான சுந்தரீசரே
மாளாதமன்னவரேயிப்போது எங்கள்குறைதீருமே-நா

துரோபதை சொல் வசனம்

கேளும் மன்னவரே, நான் எத்தனை நாளைக்கு என் கூந்தலை விரித்திருப்பேன். மேலும் நான் சொன்ன சபதம் எப்படி முடிப்பேன், ஆகையால் என் கோரிக்கை நிறைவேறச் செய்யும் மன்னவரே.

தருமர் சொல் விருத்தம்

தம்பிமார்களே கேளீர் நாமும் தவிப்பது நீதியல்ல
அம்பரும்பரும்காணொணாத ஆதிமால்பாதம்தேடி
சம்பிரதாயபூசைசெய்து சதிராக நினைத்தோமாகில்
வெம்பியகனதைக்கார்க்க வேணுநாதரும்வருகுவாரே.

வசனம்

கேளும் தம்பிமார்களே! பெண்ணே துரோபதா, நீங்கள் விசனப்பட வேண்டாம். நமக்கு ஒரு குறையும் வரமாட்டாது. ஆகையால் நம்மை காக்கும்படியாக கிருஷ்ணமூர்த்தியை துதி செய்வோம் வாரும் தம்பிமார்களே.

பாண்டவர்கள் கிருஷ்ணபகவானை துதிக்கும் தரு அடதாளம்

இதுநல்லசமயம் வருவதற்கு
இதுநல்லசமயம் கோவிந்தாகோவிந்தா
இதுநல்லசமயம்

மதுசூதனாகோவிந்தா மங்கைலக்ஷ்மிசமேதா
பதுமலர்பொற்பாதா பாரளந்தவிநோதா—இது

வைகுந்தத்தில்வாழ்ந்தோனே வாரணத்தைகாத்தோனே
ஐவேலியிலொளித்த அரன்துயர்தீர்த்தோனே—இது

வசுதேவிதன்னிடம் வந்தவதரித்தோனே
பசுகுருத்துகளைமேய்க்க பாலனாய்நின்றோனே-இது

கூவும்போதெப்போதும் குறைதீர்த்தவினோதனே
நாவுதடுமாறிநான் பணிந்தேனிப்போதே-இது

பெருமையாய்வாழ்ந்திடும் புகழாம்தலங்கைவாழும்
வறுமைதீர்க்கும்சுந்தரேசாவரவேணும் துதித்திட்டோம்-இது

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பாண்டவர்கள் கிருஷ்ணசாமியை துதித்த மாத்திரத்தில் சுவாமியானவர் துவாரகையை விட்டு பாண்டவர்களிடம் வருகிற விதங் காண்க. •



கிருஷ்ணபகவான் சொல் விருத்தம்

வசுதேவதேவகி வந்துமேகெற்பந்தன்னில்
சிசுபோலவேவந்து தானுமேயுற்பவித்த
பசிவேளையசோதையின் பாலதைசுரக்கவைத்து
நசுக்கியேபாலுண்ட நந்தனுமிதோவந்தேனே.

ஆஹா வாரும் பிள்ளாய் மாதவா! நான் தேவகி தேவியிடத்திலே உற்பவித்து அவளுடைய பால் தயிர் வெண்ணெய்களை புசித்து பன்னீராயிரம் கோபிகளையும் சேர்ந்து வாழ்ந்தேனடா மாதவா.

கட்டியக்காரன் சொல் வசனம்

சுவாமி அப்படியே மொத்தமாய் சொன்னால் எனக்குத் தெரியாது. ஆகையால் விபரமாய்ச் சொல்லவேணும் சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி அகவல்

ஆயர்பாடியினில் அவதரித்தோங்கி
ஆகுலம்தன்னை நான் அன்பாகமேய்த்து
அருமைகோபி ளான பன்னீராயிரம்
பேர்களையாண்டுமே அவர்கள்வீட்டில்
நேயமாய்பால் தயிர் வெண்ணெயைப்புசித்து
நீங்காமலவரிடம் நானுமேநின்று
நீடுமஸ்தனமுடைய பூதகியாளை
நிமிஷத்திலவளுயிர் வாங்கியேவிட்டு
வாயினால்வேணு நாதத்தையூதி
வண்மைசேர்காளிங்கன் முடியினிலாடி
வானவர்துதிக்க நானுமேஅவர்களை
வாருடன்கருங்கடல் போகவேவிடுத்தேன்
மாயமாய்வந்த சகடாசூரனைவதைத்து
மாமனாகியதோர் கம்சனையிழுத்து
மானிலம் துதிக்க மர்த்தனம்செய்து
மகிமைசேர்கோவர்த்தன கிரிதனையெடுத்து
மட்டில்லாக்கல்மாரி மழைதனைதடுத்து
மகிழ்பெறசுற்றத் தாரைக்காத்து
பொட்டனபூசைகள் புகழாகநடத்தியே
கோதைகோபாலர்களை பிரியமாய்சேர்த்து
இஷ்டமாய் அஷ்டபாரிகளையும்
சேர்ந்திருந்துமே வாழ்ந்துநான்பின்பு
திட்டமாய்துவாரகை தன்னிலேயானும்
செழிக்கவேவாழ்ந்தேன் மாதவாகேளும்

கிருஷ்ணபகவான் சொல் தரு

ராதாயெங்கே மாதவலக்ஷ்மி
ஒய்யாரியெங்கே மாதவா

மாதவாமதன்யென்னை
காதலையென்னிட

வேதனைசெய்கிறான்
கண்ணிலேகாட்டடா — ரா

அஷ்டபாரிகளினில் இஷ்டமானரதி — அதிசுகங்கொடுத்த கேளியில்மிஞ்சின - ரா
உமாதிபதிசமாதி அபினதகரமதை — அதிவிதகெணியும் விதவிதமாகச்செய்யும் - ரா
சந்தனம்பெருகிய அதிபர்சுந்தரீசரை — தலங்கைநகரில்வாழும் ஆசையுடன்பணியும் - ரா

கட்டியக்காரன் சொல் வசனம்

சுவாமி லோகாராட்டியரே! தங்களுடைய விஸ்தாரமெல்லாம் தெரிந்தேன் இப்பொழுது தாங்கள் இவ்விடம் வந்தகாரியம் இன்னதென்று அறிவிப்பீர் சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

அடா ஆனுல் சொல்லுகிறேன் கேளும் மாதவா.

கிருஷ்ணமூர்த்தி சொல் அகவல்

பார்புகழும்பராசர் பாவைமேலன்பாய்
சீர்பெருகும்மச்சகெந்தியை சேர்ந்தாரப்போது
அந்தஅறிவைதன் அன்புடன்வயிற்றில்
ஒப்பாகநல்ல உயர்முனிஉதித்தார்
அம்முனிவியாசர் அரனையேநோக்கி
செம்மையாய்தபசு செய்தவர் பின்பு
அஸ்தினுபுரியாள் அரசதையளித்து
பட்சமாய்ஐவர் பாராளவந்தார்
அதுபொருமையினுல் ஐவரைதுரியன்
சதிசெய்யவேண்டி சகுனியின்உரையால்
பகடைகளாடி பார்தனைபரித்து
ஜெகம்புகழும்துரோபதையை சேலையையுரித்தான்
அதுகண்டுபீமன் ஆக்ரமம்கொண்டு
கெதையினைகையில் கொர்ச்சித்தெடுத்தான்
அப்போதுதர்மர் அவசரப்படாதே
எப்போதும்நமக்கு யிடர்வராதென்ன
அவ்வுரைப்படியே அடங்கியேநிற்க
கௌரவன்துரியன் கபடாகஐவரை
பனிரெண்டுவருடம் பாரவனம்சென்று
தனியாகவோராண்டு தங்கியேவந்தால்
தாயாதிபக்ஷம் தருகிறேனென்றான்
நேயமாய்கேட்டவர் நெடுந்துலைச்சென்று
வனவாசம்நீங்கி வந்தார்களவரும்
கனவான்கள் தன்னைக்கான கருத்துடனிங்குவந்தேன்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

ஆ ஆ வாரும் பிள்ளாய் மாதவா! நாம் பாண்டவரிடம் போவோம் வாரும் பிள்ளாய் மாதவா.

கிருஷ்ணன் சொல் தரு ஆதிதாளம்

சுந்திரகோபாலரும் வந்தார் துவாரகையைவிட்டு
சுந்திரகோபாலரும் வந்தார்

செந்திருகைபுணரும் தந்திரயிந்திரஜாலர்
தபங்கொடிக்குந்தியர்பெற்ற மைந்தர்களைத்தேடி

சங்குசக்ரகோதண்டம் செங்கரமதில்தொடுத்து
பொங்கமாய்முத்தாரமார்பி லிங்கிதமுடன் தரித்து

சதுர்புஜம்துலங்க யாதவர் குலம் விளங்க
மதுசூதனன் பாண்டவர் மனமகிழ்ந்துவிளங்க

அண்டபுவனமெல்லாம் உண்டுவயிர் நிறைந்தோர்
அஷ்டபாரிகளுடன் யிஷ்டமுடனேகூடி-சுந்

பொது வசனம்

கிருஷ்ணமூர்த்தியைக் கண்டு பாண்டவர்கள் தோத்திரம் செய்கிற விதங்காண்க.

தருமர் சொல் தரு ரூபகம்

சருணம்சருணம்கோபாலா தர்க்காரும்கோபாலதேவா
சருணம்சருணம்கோபாலா

அருணகிரணமானபோது அன்பரைக்காத்தவா திவினோதா
திரணமானஅடியார் தங்கள்பொருட்டாய்
தேவனேஎண்ணினீர் ஆவலாய்வந்தீரே சரு

அண்டரெண்டமும் உலகானபுவனமும் தேவா
உண்டுநிறைந்த பிரசண்டஉத்தண்டனே
தொண்டரைரக்ஷிக்கும் தேவானுகூலனே சரு

பாஞ்சாலன்எக்கியத்தில்வந்த பாவையவள் புலம்பிதேவா
ஒய்ந்துமேகூவி உமைநினைத்தபோது
வாஞ்சையாய்வந்துமுன் வஸ்திரமீந்தவா சரு

வாரியடைத்தவா வந்தரக்கரைவென்றவா
கோரினவர்கள்முன் நேரினில்நின்றவா
நாரிபாகன்சுந்த ரேசர்க்குகந்தவா சரு

மருதம்வதைத்தவாகாரி மாட்டைமேய்த்தவா
கருணையாகவே முருகன்பாடினேன்
பெருமையாக்கிநீ ாருளைத்தாமே சரு

தருமர் சொல் விருத்தம்

உலகினையளந்தயெங்கள் உயிர்க்குயிரானமாலே
புலவிதமாகநொந்து படாததுன்பங்கள்பட்டோம்
நிலைபெறஎங்களுக்கு நேர்மொழிசொல்வீரென்று
கலவரம்கொண்டும்மை கர்த்தனே நினைத்தேன்சுவாமி.



துரோபதை சொல் விருத்தம்

அண்ணாவேநாங்கள்முன்பு அவ்வனம்போகும்போது
பண்ணார்களறியவேதான் பார்சபைதனிலேநின்று
எண்ணாமல்நாங்கள்செய்த யெழில்சபதமுடிக்கச்செய்து
மண்ணாளபாண்டவாளை மாயவாசெய்யும்சுவாமி.

துரோபதை சொல் தரு ஆதிதாளம்

அரிகரிகோவிந்தா ஆதிநெடுமாலே
அடியாரைக்காருமையா ஓம் கோவிந்தா
அடியாரைக்காருமையா

சோதிசுடரொளியே துவாரகைவாசனே
சித்தம்வைத்தாளுமையா ஓம் கோவிந்தா
சித்தம்வைத்தாளுமையா

கரியானது அரியேயென்றுகூவ
காத்தாயே அந்நாளிலே ஓம் கோவிந்தா
காத்தாயே அந்நாளிலே

வெறியரைபோலாகி
வீணராய் நின்றேமே
வீணராய் நின்றேமே

வேழம் குலைந்த நாங்கள்
ஓம் கோவிந்தா

பாரையாமுன்பு
பார்த்தனைக்காணமலே
பார்த்தனைக்காணமலே

பாஞ்சாலன்சபையினில்
ஓம் கோவிந்தா

முறையோ முறையோ வென்று
முன்வரச்செய்தாயே
முன்வரச்செய்தாயே

முறையிடும்போ தப்போ
ஓம் கோவிந்தா

சபையில்துயிலுரித்த
அபிமானங்கார்த் தாயே
அபிமானங்கார்த்தாயே

சண்டாளபாவிமுன்
ஓம் கோவிந்தா

அபயமென் றிப்போது
அலைந்து நாம்வாடுறோமே
அலைந்துநாம்வாடுறோமே

ஐவரும் நானுமாய்
ஓம் கோவிந்தா

குடிகேடன்சண்டாளன்
கூந்தலைத்தொட்டானே
கூந்தலைத்தொட்டானே

குலையக்குலையச்செய்த
ஓம் கோவிந்தா

படுபாவியெங்களை
பாதாதியாகச்செய்தானே
பாதாதியாகச்செய்தானே

பாரவனம்தனிலோட்டி
ஓம் கோவிந்தா

பதிமூன் றுவருஷமாக
பராக்கிரமம்குலைந்தோமே
பராக்கிரமம்குலைந்தோமே

பதியும்நிதியும்விட்டு
ஓம் கோவிந்தா

ததியில்நாங்கள்செய்த
தாரணியாளச்செய்யும்
தாரணியாளச்செய்யும்

சபதம்நிறைவேற்றி
ஓம் கோவிந்தா

அஸ்தினபுரிக்கு
ஐவரும்வாழ்வதெப்போ
கையால்முடிப்பதெப்போ

அரசராகிஎந்தன்
யெனதுகூந்தல்

சொஸ்தமாக்கியெங்கள்
சுந்தரயீஸ்வரரே
சுந்தரயீஸ்வரரே

துயரத்தை நீக்கிடும்
துதித்திட்டேன்

அரி

துரோபதை சொல் வசனம்

கேளும் அண்ணவே! அடியார்கள் பேரில் தயவு செய்து நாங்கள் முன்னல் செய்த சபதம் நிறைவேறவும் பாண்டவாளிந்த பூமியை ஆளவும் நான் விரித்த கூந்தல் முடிக்கச் செய்யும் அண்ணவே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

கேளும் அம்மணி நீங்கள் விசனப்பட வேண்டாம். உங்கள் இஷ்டம்போல நடப்பித்து வருகிறேன் அம்மணி.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

தர்மரேபீமசேனு தனஞ்செயா வாழிவாழி
மர்மங்களறிந்தநல்ல மதிகுலநகுலாவாழி
நிர்மலமனமுடையயெந்தன் நேயனேசகாதேவாவாழி
வர்மமில்லாமலென்முன் வாகுடனுரைசெய்வீரே.

வசனம்

வாழி வாழி பாண்டவர்களே! சகல காரியங்களும் உங்களுக்கே தெரியுமேயல்லாமல் வேறில்லை. ஆகையால் என்னால் நடக்கவேண்டிய காரியங்களைச் சொல்லுங்கள் பாண்டவர்களே.



தருமர் சொல் விருத்தம்

மோசம்செய்தழைத்து மிக்கவேசூதாடி
பாசமாய்நாங்களாண்ட பதியையும்பறித்துப்பாவி
வீசியசபையிற்சொன்ன விகிதத்தைகேட்பீரென்று
வாசனேயும்மைநாடி வாடியேநினைத்தோம்சுவாமி.

தருமர் சொல் தரு அடதாளம்

எத்தனை நாளைக்குயிடறுகள்படுவோம் கிருஷ்ணதேவா
சித்தம்வைத்திப்போதுவெற்றிபெறச்செய்யும் கிருஷ்ணதேவா

பனிரெண்டுவருடமாய் அனியாயம்செய்தானே கிருஷ்ணதேவா
கனிகாய்சருகுகளை யினிதாய்புசித்தோமே கிருஷ்ணதேவா

மறவரைப்போலவே தரையில்படுத்தோமே கிருஷ்ணதேவா
கரைரேவந்துநீர் கடாட்சிக்கவேணுமே கிருஷ்ணதேவா

தன்னவர்களென்றுமே நன்னயம்பாராமல் கிருஷ்ணதேவா
மன்னவர்களறிய சின்னப்படுத்தினனே கிருஷ்ணதேவா

பாவிதுரியன்செய்த படுமோசத்தாலேயே கிருஷ்ணதேவா
ஆவியுங்குன்றி யடங்கியேநின்றோமே கிருஷ்ணதேவா

வீரமும்கெட்டுப்போய் வீணராய்நின்றோமே கிருஷ்ணதேவா
காரணத்தையிப்போ கண்டறிந்துசொல்லும் கிருஷ்ணதேவா

அக்யாதவாசம் அதையும்துலைத்தோமே கிருஷ்ணதேவா
மிக்கவேசென்று உலாவியும்நின்றோமே கிருஷ்ணதேவா

ஐயனேயெங்கள்மேல் அனுக்கிரகம்செய்துநீர் கிருஷ்ணதேவா
பையரவக்கொடி யோனிடம்தூதுபோய் கிருஷ்ணதேவா

தாயாதிபட்சத்தை தந்திடவேநீர் கிருஷ்ணதேவா
காயாம்புவர்ணனே கண்டுவரவேணும் கிருஷ்ணதேவா

தலத்தில்பெருமைபெற்ற தலங்கைநகரில்வாழும் கிருஷ்ணதேவா
பலன்தரும்சுந்தரீசர் பாதமதைபோற்றினேம் கிருஷ்ணதேவா

•

தருமர் சொல் சீசபத்தியம்

வாமனரூபமாகிமுன்புவாழ்ந்ததோர் மகாபலியிடம்போய்
தானமேவாங்கிபூமியையளந்த கால்களும்நோகவேயின்று
நேமனேநீபோய்அஸ்திநபுரிக்கு நெடுந்துரியோதனனிடத்தில்
நேர்மைசேர்பெரியோர்யாவருமறிய நேமித்தஉரைப்படியாலே
பூமனேயெங்கள்பூமிபொக்கிஷமும் புகழ்பெறஅளிக்கக்கேட்டு
போதவேவரவேண்டுமென்றுமது பொற்பாதம்போற்றினேன்
காமனையளித்தகடவுளேயுனது கருணைகூர்ந்தைவர்பேரில்
கர்த்தனேசித்தம்வைத்தடியார்பேரில் கடாக்ஷம்வைத்தருளும்
[சாமி

தருமர் சொல் தரு ரூபகம் கமாஸ்

போகவேண்டும்தூது நீர்போகவேண்டும்தூது
போதனேநாதவேதனே வேதைதீர்த்திடும்ஸ்ரீதரா போ

ஆசையாகயேகிநீரும் முரசக்கொடியோனிடத்தில்சென்று
பூகரங்களால்உயிரையின்று அவனியைகொடுக்கும்யிதுசரியின்று
ஆராவமுதே நேராகப்போய் கூரா விடில்பேராகுமே—போ

ஆடுநனையுதென்றுகோனுய்க் கென்னவிசனம்
அதுபோலவர்க்குயெங்கள் மீதிலென்னசதணம்
அய்யனேமெய்யனே வெண்ணைக்கையனே துய்யமாக-போ

சந்தக்ம்போய்நீரும் சதுர்விதஉபாயம்பேசி
எந்தவிதமுமறிந்துவருக யெவராலாகும்
உன்னையல்லாமல் வீசியேகியேநீ
வேகமதாய் துரோகியிடம் நோகாமலேபோகவேண்டும்-போ

சூழைதெரித்துழாவிட்டால் குழகுழவென்றுகெட்டுப்போகும்
ஏழைக்காகதூதுபோகாவிட்டால் யேளிதம்பூமியெங்குமாகிவிடும்
எதிராகவேதலங்கை ஊர்வாழும்யீசன்
சதுர்வேதன்சுந்திரன் ஜெகதீசன்துதி-போ

தர்மர் சொல் வசனம்

கேளும் சுவாமி கர்த்தனே தாங்கள் எங்கள் பேரிலே தயவு வைத்து தங்களுடைய பாதம் நோகும்படி துரியோதனனிடம் போய் எங்களுடைய தாயாதி பக்ஷத்தை கேட்டு வரவேண்டும் சுவாமி கர்த்தனே.

வீமன் சொல் விருத்தம்

தூதுபோவென்றுநீரும் சொன்னதும்போதும்போதும்
நாதனேமகுடம்நீரும் நன்மையாய்ச்சூட்டிக்கொண்டீர்
மாதுதுரோபதையாள்கூந்தல் வாரியேமுடித்துவிட்டாள்
சாதுவேநாங்கள்சொன்ன சபதமுடித்தோமண்ணு.

வசனம்

கேளும் அண்ணுவே! நாங்கள் சொல்வதைக் கேட்டால் நீரும் பட்டாபிஷேகம் செய்து கொண்டீர்; நாங்கள் சொல்லிய சபதமும் முடித்து விட்டோம் துரோபதையும் விரித்த கூந்தலை முடித்து விட்டாள் இனி என்ன குறைவு யிருக்கிறது அண்ணு.

பீமன் சொல் தரு அடதாளம்

ஏனேயிப்படி பேசுநீர் அண்ணுவேநீர்
ஏனேயிப்படி பேசுநீர்

வானோர்கள்ளனைக்கண்டு வகைசெய்வதுமல்லாமல்
மனோகரனேயுந்தன் மனமிறங்கிடாமல் ஏ

ஆண்டவரடிநோக அவனிடம்போமென்றீர்
நீண்டகெதையென்கையில் நேமித்தும்வீமனென்றீர்

காண்டாவனமழித்த காளைசொன்னதுவீணே
தீண்டாநெருப்புடைய தேவியுரையுங்காணே

தம்பிமார்கள்செய்த சபதம்வீணுய்போகுமா
எம்பிரானேயிப்போ என்னையனுப்புசும்மா ஏ

நிலையுற்றதலங்கைவாழ் கருத்தைநிறைவேற்றும்
கலையுற்றஅண்ணலே கருத்தைநிறைவேற்றும்

தருமர் சொல் விருத்தம்

தம்பிநீபீமசேனு தடுத்திடவேண்டாமிப்போ
எம்பிரான்தூதுபோனுல் யிடரொன்றும்வரமாட்டாது
அம்பரும்அறியநாளை அவனியைநாமேயாள்வோம்
வெம்பியேமனதுநீயும் விசாரப்படாதேதம்பி.

வசனம்

கேளுமப்பா தம்பி பீமசேனு என் வார்த்தையை தடுத்திடாதே. நம்முடைய கிருஷ்ணபகவான் செல்வாரே யாமாகில் நமக்கு யாதொரு துன்பமுமணுகாது நாமே இந்தப் பூமியை யாளப்போகிறோம் தம்பி பீமசேனு.

பீமன் சொல் விருத்தம்

அண்ணுவேஉமதுபாக்கியம் ஆக்கினைபடிக்குநாங்கள்
நின்றேமேயிதுவரைக்கு நேமித்தபடியேயல்லால்
எண்ணுமல்பேசிவேறே யெதிர்வார்த்தைசொன்னதுண்டோ
கண்ணுளாஉமதுசித்தம் கருத்தின்போலனுப்புவீரே.

வசனம்

கேளும் அண்ணுவே இதுவரையிலும் உமது ஆக்கினைக் கடந்ததுண்டோ இல்லை இப்பொழுது அடியேன் மறுவார்த்தை சொல்லத்தகுமோ ஆகையால் தங்களுடைய இஷ்டத்தின்படி கிருஷ்ணபகவானை அனுப்பும் அண்ணுவே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

கார்த்திகைவீரன்தன்னை கண்டித்தஅர்ச்சுனுகேள்
நாற்றிசைபுகழும்நல்ல நாயகாவுமதுயிஷ்டம்
வேற்றுமையெண்ணிடாமல் வேந்தனுர்சொன்னதற்கு
சீற்றமாய்சொன்னீராலுல் சீக்கிரம்நான்போய்வாரேன்.

வசனம்

கேளுங்காணும் ஓய் மைத்துனு உமது தமையன் வார்த்தைக்கு நீரென்ன சொல்லுகிறீர் யோசித்து சொல்லுங் காணும் ஓய் மைத்துனு.

அர்ச்சுனன் சொல் தரு ரூபகம்

தடுக்கலாகுமா தமையன்வார்த்தையை
தடுக்கலாகுமா தேவர்தடுக்கலாகுமா
எடுத்துவீசிட யெந்தனுக்கேற்குமோ—தடுக்

சகாதேவன் சொல் தரு

உலகறியகட்டாவிட்டால் உத்தமனனல்லசாமி
பலபுலவிதங்களென்ன பாருமிதோகட்டுகிறேன்
பாரும்அண்டம்உடையவர் சோரும்படியாகவிதோ - உங்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

நான்பிரமன்எந்தனெதிர் பேசினதையானறிவேன்
கூசாமலேயென்னையேசி மோசம்வரும்சகாதேவா
முந்தியெதிர்த்தபடி சொந்தமென்றுகூறினையே - கட்

சகாதேவன் சொல் தரு

அரசர்முதல்வரசர்தானும் தாசர்களும்தானறிய
வாசுதேவாஉம்மைக்கட்டி வைக்கயெந்தனாலாகுமே
வைக்குறேன்பாரும்மைக்கட்டி பக்குவமாய்கைக்குளிதோ - உங்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

வேண்டாமப்பாசகாதேவா விட்டுவிடுமிவ்வசனம்
ஆண்டவன்தலங்கைவாழும் அய்யனறியக்கூறினே
கூறினேனெனதுவார்த்தை குறைவுவரமாட்டாதப்பா - கட்

சகாதேவன் சொல் தரு

எந்தனிடர்தீர்த்தருளும் சுந்தரேசர்தானறிய
மந்திரக்கயறெடுத்து மகாதேவாகட்டுகிறேன்
மன்னவர்கள்முன்னேயிதோ உன்னிதமாய்ப்பன்னகனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

கேளுங்காணும் சகாதேவராசனே! நீர் என்னை எப்படி கட்டுவீர். அதை தெரியச் சொல்லவேணும் சகாதேவராசனே.

சகாதேவன் சொல் வசனம்

ஆனால் சொல்லுகிறேன் கேளும் மைத்துனா.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு அடதாளம்

எப்படிஎனைக்கட்டுவாய் சகாதேவா
எழிலாகநீ சொல்லுவாய்

இப்போதுஎன்னைக்கட்டும் எண்ணம்நிறைவேறுது
தப்பாகும்நீர்சொன்ன சபதமும்நிறைவேறுது - எப்

ஆதிசங்கரராலும் அவராலுமாகாது
சோதிப்பெருகும்பிரம்ம தேவராலுமாகாதே - எப்

திரிலோகபுவனசங் காரிகள்முதலானோர்
ஒருவருமிப்படி யுரைத்ததையறிகிலேன் - எப்

உடல்ரெண்டுஉயிரொன்றும் உறுதிக்கொண்டவராலும்
மடல்போன்றபுஜபல மன்னராலாகாதோ—எப்

தலங்கைநகரில்வாழும் தர்பார்சுந்தரீசர்
துலங்கியபாதத்தை துதித்துமுருகன்சொன்னேன்—எப்

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

கேளுங்காணும் சகாதேவராசனே! என்னைக் கட்டுகிறேனென்ற வார்த்தையைக் கேட்டால் ஆச்சரியமா யிருக்கிறது. எதோ என்னைக் கட்டுங்காணும் பார்ப்போம் சகாதேவராசனே.

சகாதேவராசன் சொல் தேவாரம்

இஷ்டதேவதையேஎந்தன் இதயந்தன்னில்
கஷ்டப்படுவாய்நீதான்காளையின் என்முன்னாலே
பொட்டெனநிற்பீரென்று போதவேஉறுதிகொண்டேன்
திட்டமாய்வந்துஎந்தன் சிந்தையில்நிற்பாய்தேவா.

இதுவுமது

ஆயர்பாடியில்முன்பு அரிவைகோபியரெல்லாரும்
மாயனேஉம்மையந்த மங்கையர்கட்டினுப்போல்
செவ்வாயனேயிதோநான்கட்டும் வல்லமைபாருமென்று
கியானநூல்கயிற்றினாலே கிட்டியேகட்டலுற்றான்.

சகாதேவன் சொல் தரு அடதாளம்

நான் கட்டுவேனுன்னைப்பாராய் கிருஷ்ணா
நான் கட்டுவேனுன்னைப்பாராய்

நான்கட்டுவேனுன்னை ஞானக்கயிற்றினாலே
வானமெட்டுமும்மிட வஜ்ரமணிக்கழுத்தை-நான்

அண்டபுவனங்களை அள்ளியுண்டவாயா
புண்டரீகத்தோளனே பிடித்துக்ஷணத்தில்நேயா—நான்

உலகத்திலுனைகட்ட ஒருவராலாகுமோ
நிலையுற்றயென்னிட நெடுமனக்கயிற்றாலே—நான்

உம்மைகட்டுவதற்கு ஒருபொருட்டாயெனக்கு
மன்னியதேவனே மடல்விரியயிழுத்து-நான்

கன்னல்பெருகிய கலவையாம்தலங்கைவாழ்
சின்னவளுடலுற்ற சுந்தரீஸ்வரரே-நான்

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

பொறும்பொறும்இப்போதென்னை பிடித்துநீகட்டவேண்டாம்
கருணையாய்நீநினைத்த காரியமுடித்துத்தாரேன்

வறுமைநீகொள்ளவேண்டாம் வையகத்தோர்கள்மெச்ச
நிருபனேஉமதுயிஷ்ட நினைவதைசொல்லுவாயே.

வசனம்

கேளும் மைத்துனா! உன்னை மெச்சினேன் பொறும் பொறும். உன்னுடைய மனதில் நினைத்த கட்டை தளர்த்தும் களர்த்தும். உன்னுடைய இஷ்டத்தைச் சொல்படியே முடித்துத் தாரேன். உன்னுடைய இஷ்டத்தைச் சொல்லும் சகாதேவராசனே.

சகாதேவன் சொல் விருத்தம்

ஐயனேலோகரட்சகா அடியிணைப்பணிந்துசொல்வேன்
வையகமுழுதுமாள வைப்பதல்லாமல்பின்பு
பையரவக்கொடியேன்தன்னை பண்பாகஜெயித்துவாழ்க
மெய்யனேசெய்வேனென்று மேன்மையாய்வலக்கைதாரும்.

வசனம்

கேளும் சுவாமி லோகரக்ஷகரே! அடியார்கள்பேரில் தயவு செய்து நாங்கள் இந்த உலகையாளவும், அந்த துரியோதனாதியர் யாவரையும் ஜெயிக்கும்படி செய்யவும், இந்த பாரத யுத்தத்திலே எங்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் கார்க்கிறேனென்று அபயஸ்தம் கொடுக்கவேணும் சுவாம் கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

தருகிறேனப்படிக்கு சகாதேவாசொல்வேன்கேளாய்
கருணையாய்நீயும் கலந்துண்மைபேசும்சிந்தை
ஒருவருமறிந்திடாமல் உன் மனமிருக்கவேண்டும்
பெருமைசேர்மைத்துனநான் போகிறேன்வலக்கைதாரும்.

வசனம்

கேளும் மைத்துனா! நீயும் நானும் பேசிய உண்மையை ஒருவருமறியாமலிருக்க வேண்டும். ஆகையால் அஸ்தினாபுரிக்குப் போய் வருகிறேன் மைத்துனா

அப்படியே போய்வாரும் லோகரக்ஷகரே.

துரியோதனன் வருகிற எண்சீரடி விருத்தம்

தக்கபெருமிக்கசெழும் திக்குத்திசையுள்ளவெகு
தேசமன்னவர்கள் போற்ற
திரைகப்பணங்கொண்டு ராஜாதிராஜர்கள்
தேடிசபைசூழ்ந்து ஆர்ப்பரிக்க
பக்குவமதாகவெகு பட்டாக்கத்திகள்கட்டி
பாவலர்கள் தாங்கிநிற்க

பாங்காக தாளமே ளங்கள் தட்டி
பம்பைமுரசும் முழங்க
தக்கபடி தம்பிமார் ஈட்டியெரியீட்டி தோமரம்
தாங்கியிரு பாலும் நிற்க
சம்ப்ரமுடன் மகுடவர்த்தனர் பட்டவர்த்தனரும்
சகலஆச்சாரிமார்கள் சூழ
கக்களாஞ்சிகள்கொண்டு கன்னியர்கள் பாடிட
கைலாகுதந்துமே கட்டியங்கூறிவருக
கதிரொளியைபோலொத்த நிலைபெற்றமகுடந்தாங்கி
காம்பீர்ய சுயோதனன் கொலுவாகினன்.



துரியோதிரன் வருகிற தரு திரிபுடை

தத்திமிதிமிதக தனுததெம்தரிகிட தகதாகஜெம்தரி தாங்குந் தக்குந் தரிதக்கிட கிடதரிகிட கிடதக்காகிட கிடஜேகிட ஜெம் தரி தாகிட சேகிட ஜெம்தரி தரி தில்லான தரிதில்லா தெரிஜம்.

அஸ்திநபுரியாளும் அரசன்சுயோதனன்
அமரர்மெச்சிட சம்ப்ரமாய்கொலுவானன் - அஸ்

அஸ்திரசாஸ்திரசகாயன் தனுமுறைகற்றவன்
தம்பிமார்யாவர்க்கும் தாஷ்டீகமுற்றவன்
விசித்திரமாகிய விருதுகள்பெற்றவன்
வேந்தர்கள்போற்றிட வெகுமதிபெற்றவன் - அஸ்

பீஷ்மர்துரோணர்கிருபர்முதல் பெரியோர்கள்வாழ்த்திட
பிரபலராகியகர்னன் மகிழ்ந்துகைகோர்த்திட

ஆட்சியில்லாதவன் அவன்மனமகிழ்ந்திட
அம்மான்சகுனிராஜன் அவனுரைகேட்டிட - அஸ்

பட்டவர்த்தனர்கோடி பக்கம்நிறைந்திட
பண்வாககட்டியர் பணிந்துஆர்ப்பரித்திட
மட்டிலாஅதரதர் சமரதர்சூழ்ந்திட
மண்டலஅரசர்கள் கொண்டாடிகண்டிட - அஸ்

எக்காளபேரிகை எங்குமுழங்கிட
ஏகசக்கிரக்குடை எழிலாகத்தாங்கிட
மிக்கவேதியர்மறை வேதங்களோதிட
மேலானகன்னியர் ஆலங்களேத்திட - அஸ்

அரவக்கொடிபறக்க அண்டம்நடுநடுங்க
அணியும்நந்தியாவட்டை மாலையசைந்திட
வரைபோலநிலையற்ற வணங்காதமுடுபெற்ருேன்
வள்ளல்சுந்தரீசரை வணங்கியேதுதித்திட்டோன் - அஸ்

துரியோதிரன் சொல் விருத்தம்

கடல்சூழ்ந்தஉலகுக்கெல்லாம் கர்த்தனுய்விளங்குகின்ற
மடல்போன்றபுஜத்தோன்யார்க்கும் வணங்காதமுடியோன் தானு[ம்
அடல்போன்றதம்பிமாரும் அங்கேதேசத்தோன்சூழ
படையோடும்பாட்டனேடும் பார்மன்னன்வருகின்ருனே.

சபை வணக்கம்

வாரணமழைத்தபோது வந்துகாத்தவரேபோற்றி
சீரணிலுயர்ந்தநல்ல திருவேநின்பாதம்போற்றி
தாரணிபுகழுகின்ற தயாபராபோற்றிபோற்றி
காரணரானயெங்கள் கடவுளேபோற்றிபோற்றி.

வசனம்

அகோ வாருங்கள் தம்பிமார்களே நாமெல்லோருமிருக்கையில் நமது சகுனி மாமாவைக் காணுமே. ஆகையாலவரை சீக்கிர மழைப்பியும் தம்பி துர்ச்சாதனு.

சகுனி வருகிற விருத்தம்

கலகமேசெய்துநல்ல காரியம்தனக்கொவ்வாத
நிலையிலாவார்த்தைபேசி நெடுங்குடிகெடுக்கவல்லோன்
பலவிதசூதும்வாதும் பக்ஷபாதங்கள்செய்வோன்
தலமதில்பேரும்பெற்ற சகுனியுமிதோவந்தானே.

சகுனி வருகிற தரு ரூபகம்

சகுனிவந்தானே பொல்லா
சகுனிவந்தானே
சகுனிவந்தானே மகிழ்வாயேகியே
சுகமாகவந்தோரை அகமேகெடுக்கும்—சகுனி

சூதுவாதுவஞ்சம் உள்ளதெப்போதும்
துடங்கிவாழ்ந்தவன் பொல்லா
காதகனுய்வந்து நூற்றுவர்குடிக்கு
காலனுய்நேர்ந்தவன் யெப்படியாகிலும்
நயமாய்பேசியே யிவர்கள்யாவரையும்
கெடுத்திடத்தப்புவேனே நான்முன்சொன்னபடி
என்சபதமுடிக்கவே கைப்பரம்காட்டவே-சகுனி

பாண்டவராலேயென் பழியைதீர்த்திட
ஆண்டவர்சுந்தரீஸர் அவருமறிந்திட
அன்பாயவர்பாதம் இன்பமாய்போற்றிட—சகுனி

துரியோதனன் சொல் வசனம்

வாரும் வாரும் என் மாமாவே

சகுனி சொல் வசனம்

சொல்லும் சொல்லும் என்னுசை மருமகனுகிய துரியோதன மகாராஜனே.

துரியோதனன் சொல் வசனம்

கேளும் மாமா இன்றையதினம் நம்முடைய கொலுவுக்கு கிருஷ்ணமூர்த்தி வருகின்ருராம் அதற்காக உம்மை அழைப்பித்தேன் சகுனி மாமா.

சகுனி சொல் வசனம்

ஆனுல் நமது கர்னமகாராஜனை அழைப்பியும் துரியோதன மகாராஜனே.

கர்னராஜன் வருகிற பொது விருத்தம்

சங்கரனருள்பெற்ருேங்கும் சற்குணமானநேயன்
பொங்கமாம்கதிரோனுக்கு புதல்வனுய்வந்தசேயன்
மங்களகரமதான மகிமைசேர்கர்னராசன்
அங்கதேசத்தையாண்ட அதிபரும்வருகின்ருரே.

வசனம்

அகோதெப்படியென்றால் கதிரோனுக்கு அவதரித்த கர்ன மகாராஜன் வருகிற விதங்காண்க.

கர்னராஜன் வருகிற தரு ரூபகம்

கர்னராஜன்வந்தான் சொர்னமேனியுடையோன்
கர்னராஜன்வந்தான்

சொர்னமேனியுடையோன் சுகுணவார்த்தைக்குடையோன்
தர்மதானத்துக்குரியோன் சகலசம்பத்துமுடையோன் - கர்

குந்திதேவிபெற்றகுரு குலத்தில்வந்தவதரித்து
மைந்தனுகதுரியனிடத்தில்மாறுசெல்வமும்தோறுமல்பெரும் - கர்

அங்கதேசத்துக்குடையோன் அகிலதேசத்தார்கிடையோன்
செங்கைவில்லுக்குரியோன் செழிக்கும்படைக்குடையோன் - கர்

செஞ்சோத்துகடன்கழிப்போன் துரியன்துயரைதீர்ப்போன்
வஞ்சகராவியைவதைத்து அறுப்போன்
வள்ளல்சுந்தரீசரைவணங்கி போர்ப்போன் - கர்

கடவுள் துதி விருத்தம்

எத்திசைபுகழுகின்ற வெழில்பெரும்சிவனேபோற்றி
அத்தியையுரித்தயெங்கள் ஆண்டவாபோற்றிபோற்றி
பக்தர்கள்தனை ரக்ஷிக்கும் பராபரப்பொருளேபோற்றி
முத்தியையளிக்குமெங்கள் முதல்வரேபோற்றிபோற்றி

வசனம்

கேளும் துரியோதன மகாராசனே என்னை யழைத்த காரியம் இன்னதென்று அறியச் சொல்லும் துரியோதன மகாராசனே.

துரியோதனமகாராசன் சொல் வசனம்

கேளும் கர்னராசனே நேற்றைய தினம் சஞ்சயமகாமுனியை பாண்டவர்கள் அனுப்பினார்கள். இன்றைய தினம் கிருஷ்ண மூர்த்தியை அனுப்பினார்களாம் ஆகையால் என்னயோசனை சொல்லும் கர்னமகாராஜனே.

துரியோதிரன் சொல் தரு ரூபகம்

முனிவரைத்தூது அனுப்பினர் நேற்று
முனிவரைத்தூது அனுப்பினர்

முதல்வராகிய முதல்வரே கர்னு
விதமறிந்துயித்ததியில் சொல்வீர்-முனி

பணிபவர்க்காக பணிந்தகோமான்
பாடிவீட்டுமுன் ஓடிப்போனவன்
கூடியவரிடம் மோடிசெய்திட்ட முனி

வந்தவர்க்கிங்கு சொந்தமாக்கினல்
வையகம்வையுமே மெய்யநேயமர்
நையலோர்களும் நைய்யபேசுவார் முனி

ஓட்டுவதற்கு யோசனைசொல்ல
உரைக்கயாரினி யிருக்கிருர்வேறே
அறிக்கைசெய்திடும் உருக்கமானவர் முனி

மங்களமாக கெங்கையைசூடும்
மகாதேவதேவ சுந்தரீஸ்வரதேவனே
ஆவலாகவே கூவினேனிதை முனி

வசனம்

கேளும் மாமாவே புத்தியில் சிறந்த கர்னபூபரே நேற்றைய தினம் நடந்ததை சொல்லுகிறேன் கேளும் கர்னராசனே.

துரியோதிரன் சொல் விருத்தம்

மாமாவேயெனக்கிசைந்த மகிபரேகர்னபூபா
சாமர்த்தியமெண்ணியஜவர் சஞ்சயமுனிவர் தன்னை
பூமானேயேகியெங்கள் பூமிபொக்கிஷத்தைமெள்ள
ஏமாற்றிகேட்கச்சொல்லி யென்னிடமனுப்பினுரே.

வசனம்

கேளும் என் மாமாவாகிய கர்னராசாவே! நேற்றைய தினம் பாண்டவர்கள் சஞ்சயமகாமுனியை அனுப்பி நாட்டைக் கேட்க நான் ஆகாதென்று அனுப்பி விட்டேன். ஆகையால் இன்றைய தினம் அந்த கிருஷ்ணர் நம்மிடம் வருவதாக தெரிய வருகிறது. அதற்காக அழைப்பித்தேன் கர்னமகாராஜனே என் மாமாவே.

கர்னன் சொல் தரு ரூபகம்

அனுப்பினுர்களா தூதனுப்பினுர்களா
நமதிடமனுப்பினுர்களா

அனுப்பினுர்களா அவரை நம்மிடம்
அவனியையாம் ஆளவந்தும் இடம் அனு

பாஞ்சாலன்சபையிலன்று பாவைதுரோபதைக்காகவந்த
தனஞ்செயன் என்முன் தப்பியேபோனதால்
தரிக்குறேன்யிங்கு முரிக்கிறேன்வந்தால் அனு

காண்டாவனந்தனிலேதப்பி கடுகிவந்தஅரவமது
தலையைவிட்டிடப் போகுதா அனு

சொன்னநாட்டைகேட்டஅவரும் சூரத்தனம்பேசிவீரத்தனமாக
மன்னவரறியவில்லை யெடுப்பாரா
மாடுமேய்த்தகோலை கையில்பிடிப்பாரா அனு

நாட்டைகொடுத்திட யிசைந்தோமானால்
நான்வளர்த்தஅரவம் வீணாகப்போகும்
நாட்டுக்கவரை அனுப்பவுங்கூடாது
காலையைக்கண்டிக்க வேளையும்நேர்ந்தது அனு

சுந்தரயீஸ்வரர் தன்னைபணிகுவோம்
துஷ்டர்களைக்கொல்ல யோசனைசெய்குவோம்
முடிப்போம்சபதத்தை யெடுப்போம்துஜத்தை அனு

சகுனி சொல் வசனம்

கேளும் ஓ கர்னமகாராஜனே! நான் ஒன்று சொல்லுகிறேன் செவிகொடுத்து கேளும் ராஜனே.

சகுனி சொல் விருத்தம் எண்சீர்

சொல்லுவேன் கர்னராஜனேயெந்தன்
சேதியையன்புடன் கேளாய்
துரியோதிரன்தன்னை சபையிலேமுன்பு
துரோபதைசொன்னதை மறந்திடப்போருய்
கொல்லையில்மாடாடு கொண்டுபோய்மடக்கி
கூழுக்குகையேந்து மிடையன்
கொற்றவர்ஐவர் தங்களுக்காக
கும்பகோணம் செய்திடவருவான்
எல்லாம்நீங்கள் மனமது தளர்ந்து
வந்தவன் தனக்கிடம் கொடுக்கவேபோரீர்
வார்த்தையால்பேசி வரத்தகாதென்று
வந்தவழிப்படி ஓட்டிளுல்நாமே
புல்லியபசங்கள் வார்த்தைநாம்கேட்டு
புறப்பட்டுவந்ததே மோசமென்றெண்ணி
ஏகுவானவனும் யெண்ணிடவார்த்தை
அசட்டையாய் யெண்ணிடப்போரீர்.

வசனம்

கேளும் என் அன்புக்கிசைந்த மருமகனே அந்த இடையன் நமதிடம் வருவதைப் பார்த்தால் ஏதோ கும்பகோணம் செய்ய வருவதைப்போல் தோணுது. முன்னுல் நடந்ததை மறந்து

தாயாதிகளென்று தயவுவைத்து இடங் கொடுக்கப்போகின்றீர்கள் மருமகர்களே.

துரியன் சொல் விருத்தம்

உன்னிடமனதுக்கேற்ற எழில்பெரும்புலியேதம்பி
பன்னியநூல்தெரிந்து பாட்டமாரேபெரியோரேகேள்
நன்னயமாககிருஷ்ணர் நமதிடம்வருகின்ருராம்
என்னிதமாகமுன்போய் உபாயமாயழைத்துவாரீர்.

கிருஷ்ணமூர்த்தி வருகிற தரு அடதாளம்

தேடிவருகிருர்பாரீர் சுவாமி
திருவடிநோகவே துரியனைக்கோரி-தேடி

காடுசெடிவனம்தாண்டி கரிபமாலாண்டவர்
கடுகவேநாடி தேடிவருகிருர்பாரீர்

அஸ்திநுபுரம்வந்தார் ஆனந்தமாகவே
தானங்கேநின்ருர் தேடிவருகிருர்பாரீர்

வீதியில்வந்தவர் நின்றுமுன்பு மேளதாளம்வரும்
மேன்மைகண்டு தேடி

எப்படியோசனை எண்ணியேநினைத்தவரும்
தப்பில்லாவிதுரன்வீட்டை தானிங்கேநண்ணி

கருணைதலங்கைவாழ் கர்த்தனேசுந்தரீசா
கடவுளேகாரும் தேடிவருகிருர்பாரீர்-தே

வசனம்

அகோதெப்படியென்ருல் சுவாமியானவர் வரும்போது மேளதாளத்தைக்கண்டு அந்த வீதியைவிட்டு விதுரராசனிட வீதியில் வரும்போது விதுரராஜன் கண்டு சுவாமியைத் துதிசெய்கிற விதங் காண்க.

விதுரராஜன் சொல் விருத்தம்

அரிகரிமுகுந்தாபோற்றி ஆதிநாரணரேபோற்றி
கரிதனைக்கார்த்தாய்போற்றி காரணப்பொருளேபோற்றி
சிறியஎன் குடிசைதன்னில்சித்தம்வைத்தாள்வாய்போற்றி
அறியாதமூர்க்கன்மீது அன்புவைத்தாள்வாய்போற்றி.

விதுரராசன் சொல் தரு அடதாளம்

சரணம்சரணம்கோபாலா அடியேன்செய்த
சஞ்சலந்தீர்ந்தேன் கோபாலா

திரணமான அடியேனைத்தேடி நீரித்தூரம்
பரமானந்தப்பொருளே பாதம்நோகவந்தீரோ
முன்னால்செய்தவினை நீக்கினேன் கர்மந்தொலைந்து

போனவனுகினேன் யின்னுளிடரதும்நீக்கினேன்
பன்னகசயனனே பாக்கியவானுகினேனே-சர

அடியேன்செய்தபிழை பொறுத்தாதரித்தருள்தாதா
படியளந்திடும்தேவா படைத்தமுதுண்ணும்பாலா

எந்தன்குடிசையும் நானுமீடேரினும்
விந்தையாய்தலங்கைவாழ் சுந்தரீசரைப்பாடினேன்-சர

வசனம்

சரணம் சரணம் சுவாமி இந்த ஆசனத்திலெழுந்தருளும் சுவாமி கர்த்தனே.

விதுரராசன் சொல் விருத்தம்

அஸ்திநுபுரிக்குதாங்கள் அடிவைத்தபோதேநானும்
சொஸ்தமாய்நானுமிப்போ செயலதுபெற்றுக்கொண்டேன்
பக்ஷமாய்வந்ததென்ன பாண்டவர்க்ஷேமமென்ன
அக்ஷயம்பெறவேசொல்லும் ஆண்டவாபோற்றிபோற்றி

வசனம்

கேளும் சுவாமி கர்த்தனே! தாங்களிவ்விடம் வந்தபோதே நான் ஈடேறினேன்! மேலும் பாண்டவர்களுடைய க்ஷேமமென்ன சுவாமி தாங்கள் நடந்துவந்த ஆயாசந்தீர கர்த்தனே கொஞ்சம் பாயசம் புசியும் சுவாமி.



விதுரமகாராஜன் சொல் தரு ரூபகம்

ஆயாசம்தீரும்தேவா பாயாசம்நெரும்தேவா-ஆயா
காயாம்பூவர்ணனே கமலப்பாதனேநீ

வாயாரவெண்ணையை வாங்கியுண்டோனே-ஆயா
சங்குசக்கரகோதண்டம் கெதைதாங்கும்கையனே

மங்கைலட்சுமிபாகனே மகிமுமையனே-ஆயா
ஆயர்பாடியிலமர்ந்தவாசனே ஐவரைகார்த்திட ஆதிகேசனே

தாயாகியுலகைதாங்கும் சர்வேசனே
தாசன்படையமுதைக்கொள்ளும் சர்வேனே-ஆயா

சின்னவன்வாழும் சிறுகுடிசைதன்னில்
சித்தம்வைத்தேனிந்த தேவா

முன்னவராகிய சுந்தரயீஸ்வரா
கிர்த்தியினருளிது தேவா-ஆயா

வசனம்

சுவாமி கர்த்தனே தாங்கள் வந்த காரியம் இன்னதென்றறி வியும் சுவாமி.

கிருஷ்ணபகவான் சொல் விருத்தம்

விதுரராசனே நீர்கேளும் வேந்தனும்சுயோதனன்முன்
பொதுவாகவந்துநாட்டை பிரியமாய்கேட்பதற்கு
ததியிதுபோதென்றென்னை தர்மருமனுப்பிவைத்தார்
அதுசேதிக்காகவந்தேன் அறிந்திடாய்அறிந்திடாயே.

வசனம்

கேளும் விதுரராசனே முன்னுள் பாண்டவர்களுக்கு சொல் லியபடி அவர்களுடைய நாட்டை கேழ்க்கும்படிக்கு அனுப்பினுர் கள் ஆகையால் நாம் போய்வருவோம் வாரும் விதுர ராசனே.

துற்சாதனன் சொல் விருத்தம்

துதிபெறும்அண்ணுகேளாய் துரிதமாயேகிநாமும்
அதிவிதமேளதாளம் அனேகவாத்தியங்களோடு
எதிர்கொண்டழைக்கப்போனோம் யெங்களைவிட்டுவிட்டு
விதுரன்தன்வீடுபோனுர் வேந்தரேநாங்கள்வந்தோம்.

வசனம்

கேளும் அண்ணுவே தாங்கள் சொல்லியபடிக்கு எதிர் கொண்டு போய் அழைக்கப் போனோம் அந்தக் கிருஷ்ணன் விதுரராஜன் வீட்டுக்கு போயினுன் அண்ணுவே,

துரியோதனன் சொல் விருத்தம்

வருகிருனென்றுசொல்லி வண்மையாயனேகமான
பெருமையாய்மேளதாளம் புகழ்பெறயனுப்பினுலே
நற்குணவதனரான நன்மைசேர்பாட்டரேகேள்
அறிவிலாயிடையன்செய்த அக்ரமமறிந்திடீரே.

வசனம்

கேளும் சபையிலுள்ள பெரியோர்களே கர்னமகாராசனே மாமாவே நாம் இந்த கிருஷ்ணன் வருகிருனென்று மரியாதையோடு அழைக்கவனுப்பினுல் நம்மை அவமானப்படுத்திவிட்டு ஏகிறுனுகையால் சொல்லுகிறேன் கேளும் சபையோர்களே.

துரியோதனன் சொல் அடதாளம்

தூதுவந்தவன்யிடையனு யென்னிடம்பேசி
வாதுசெய்திட வந்தான்-சுரு

தேடியெதிர்கொண்டாடி யேகினுல்
பேடிவிதுரனை நாடிபோனுனெ ஆ ஆ சரி-தூது

வாதுசெய்திடவந்தானே யென்னிடம்
பேசிவழக்கைதீர்த்திட நின்ருனு
ஏதும்வக்கில்லாத யிழியன் விதுரன்வீட்டில்
இருந்துபொசித்துநின்ருேன் பரிந்துஐவரையன்று-சுரு

பகடையாடினுன் நிகடவைத்தனே
விகடம்பேசிநீ மகுடம்யீய்ந்திட ஆ ஆ சரி-தூது

காட்டில்காலியை மேய்த்தானே வெண்ணை திருடி
கட்டியுதையும் பட்டானே நான்
கூட்டி ஐவரைகாட்டில் ஓட்டினவர்க்குவழி
பாட்டையிதுதானென்று காட்டியிங்குவந்தானு-சுரு

கண்டவிடத்தில் உண்டுநின்றவன்
குண்டுணித்தனம் இன்றுகாட்டிட ஆ ஆ சரி-தூது

மதுராபுரியைவிட்டானே சராசந்தனுக்காய்
மானுபிமானங் கெட்டானே
பக்தியில்லாதயாதவர் குலத்திலேபிறந்தவனுவந்து
பிள்ளைபசங்களுக்கு யில் லிடந்தேடவந்து-சுரு

இங்குமங்குமாய் தங்கிதங்கியே
சங்கைகெட்டவ னெந்தனெதிரிலே ஆ ஆ சரி-தூது

திருடன்திருடனென்று தேசத்திலுள்ளோர்
சேர்க்கமனம்விட்டாரே அவனைஐவர்

பெருமையெண்ணியுருகி யெங்களிட
வறுமைநீங்கிடபூமி தருக்கச்செய்யன்றோர்க்கு சுரு

வையகமெச்சின கையேந்தியே
அய்யன்சுந்தரீசர் மெய்யையறிந்திட ஆ ஆ சரி-தூது

துரியோதிரன் சொல் விருத்தம்

துறத்தியேவிட்டவற்க தூதுக்காய்வந்தோன்
வீரத்தனமாகவிதுரன் வீட்டிற்குச்சென்றேன்
தராதரம்கண்ட தாஷ்டீகம்பெற்ற
புராதனமான பெரியோரேகேளும்.

துரியோதிரன் சொல் தரு அடதாளம்
இராகம் கல்யாணி

பாரும் பெரியவர்களே யிடையன்செய்த
மாறுபாடறிந்தீர்களா

பாரும்பெரியபாட்டரே யிதுவென்ன
வாரும் யிடையனிங்கே வராமற்போனதால்

வந்தாலவனைக்கண்டு முந்திபணிசெய்தால்
சிந்துபடவே தொந்திரவுசெய்வேன் ஆ பாரு

பெரியோர் ஆச்சாரியார்களே அஸ்வத்தாமரேநீர்கேள்
பாசமாய்கர்னரே பரிவானமாமாகேள் சுரு

பழுதுசெய்தவனை யிழிவுசெய்தாலே
செழுமையாயது மகிழ்வாயுரைசெய்யும் ஆ பாரு

தாயாதிகளுக்காக தான்யிங்கேதூதாக
நாயாபாரம்செலுத்த நாடிவந்தான்வாதாக சுரு

நடக்கையறிந்தீர் கடக்கவந்தவன்
கெடுக்கவிதுரன் விடத்துயேகினன் பாரு

வேசியின்மகனை விதுரன்வீட்டில்நின்றதும்
பேசிவிட்டுப்புசித்து மோசம்செய்யவருவதும் சுரு

முந்தியோசித்தா லெந்தவிதத்துக்கோ
வந்துயிருக்கிறன் பந்தம்சொன்னேன் ஆ பாரு

ஏதோவஞ்சகஞ்செய்ய் யிங்குவந்திருக்கிறன்
தீதாக்கிவிடவேணும் சிந்தையில்நண்ணுங்கள் சுரு

சொல்லினேன்யுரை வல்லவீரரே
கெல்லினுலெதிர் கொல்லுவதேநெறி ஆ பாரு

அவனிங்கேவருகுவான்
கவனங்கொண்டெதிரேகி

காதலாகவே
நீதிதப்பினுல்

துதிக்கும்தலங்கைவாழ்
மதிகுலத்திலுதித்த

மனதில்யாவரும்
தன்தன்புத்தியை

ஆராவதவனுக்கு
கையெடுக்கபோகிறீகள் சுரு

ஓதினேனிதை
சேதமாக்குவேன் ஆ பாரு

சுந்தரீசரை போற்று
மன்னரேயிதைபோற்றும் சுரு

சினம்செய்யாமலே
உன்னிதமாயெண்ணி பாரு

துரியோதிரன் சொல் விருத்தம்

என்னிடசபைநிறைந்த வெழில்பெரியோரேகேளீர்
மன்னியயிடையனிந்த மகாசபைவருவானுகில்
முன்னம்போயவனைக்கண்டு மேன்மைகள்செய்வீரானுல் [னேன்
சின்னமேபடுத்திவைப்பேன் தெரியுங்கள்சொன்னேன்சொன்

வசனம்

கேளுங்கள் பெரியோர்களே அந்த யிடையன் நம்மை அவமதித்து அந்த வேசிமகன் விதுரன் வீட்டுக்குப் போனவன் இவ்விடம் வருவான் அவனைக்கண்டு எதிர்கொண்டு போய் மரியாதை செய்ய ஞாயமில்லை ஆகையால் அவனுக்கு யாராவது கையெடுத்தவர்களை ஆக்கினை செய்வேன் அறியுங்கள் பெரியோர்களே.

பொது கவி

கட்டியங்கூறநல்ல காளமேளங்களார்ப்பரிக்க
பட்டவர்த்தனர்கள் சுற்றும்பண்பாகநின்றுபார்க்க
மட்டில்லாசபைநிறைந்த மகாபெரியோர்கள்சூழும்
திட்டமாய்கொலுவில்மிக்க தேவகிமைந்தர்வாரார்.

வசனம்

அகோதெப்படியென்றுல் சுவாமியானவர் விதுரராசன் வீட்டில் ஆயாசந் தீர்ந்து விதுரராசனை கூட்டிக்கொண்டு துரியோதனன் நிறைந்த சபைக்கு வருகும்போது சகலமானபேரும் எதிர்கொண்டு வந்தனஞ் செய்தார்கள் அவர்கள் யாவருக்கும் ஆசீர்வாதம் செய்கிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

பெருமைசேர்பீஷ்மாச்சாரி புனிதரேதுரோணச்சாரி
அருமையாம்அஸ்வத்தாமா அன்பரேகிருபாச்சாரி
மருவிலாமுடிதரித்த மதிகுலம்தனிலுதித்த
கருணைசேர்சுயோதனர்க்கும் கர்னருக்கும்ஆசீர்வாதந்தானே.



வசனம்

வாரும் வாரும் பீஷ்மாச்சாரியே! துரோணாச்சாரியரே! கிருபாச்சாரியரே! அஸ்வத்தாமரே! யாவருக்கும் ஆசீர்வாதம் ஆசீர்வாதம், துரியோதன மகாராஜனுக்கும் கர்ணமகாராஜனுக்கும் என்மேல் மனவருத்தம்போல் காணுகின்றது ஆகிலும் குற்றமில்லை சந்தோஷமாய் எழுந்திரும் ஆசீர்வாதம்.

துரியோதனன் சொல் விருத்தம்

வேசியின்மைந்தனை விதுரன் தன்வீட்டில்நின்று
பேசியேவிட்டுநீயும் பொசிப்பதுஉண்டுபின்னால்
நேசமாயவனைக்கூட்டி நீயிங்கேவரவுமாமா
வீசியேசபையைவிட்டு வேகமாய்நடவுங்காணும்.

வசனம்

கேளுங்காணும் கிருஷ்ணபகவானே! நீர் வருகிறீரென்று எதிரனுப்பினால் அதைவிட்டு விட்டு அந்த விதுரன் வீட்டுக்குப் போய் பொசித்துவிட்டு அந்த வேசிமகனையும் அழைத்துக் கொண்டுவரத் தகுமா இந்த சபையைவிட்டு நடவுங்காணும் கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

காட்டுக்குச்சென்றகாளை யைவர்க்குவனவாசமீண்டு
மாட்டினைமடக்கிமன்னன்விராடன் மகிழ்பெறநின்றவாயின்று
நாட்டினைவேண்டிஎன்னையேதூது உன்னிடமேகிடைப்பதையறியவே
கேட்டுவரச்சொன்னதால்விதுரன்கிரகமெழுந்தருளினன்கேளாய்

வசனம்

கேளுங்காணும் துரியோதனமகாராஜனே! நாம் உம்முடைய சபா மண்டபம் வருவதற்கு என்ன தடைப்பட்டதென்றல் பாண் டவர்கள் பன்னிரண்டு வருஷமும் துலைந்து ஒரு வருஷம் அக்யாத வாசமும் முடித்து இப்போது உபலாவியம் வந்திருப்பவர் தங்களு டைய தாயாதி பக்ஷத்தை கேட்பதற்காக என்னை தூதாகப் போய்வாருமென்று சொன்னதால் தூதுவந்தவர் நேராக வந்து பொசித்து மறுபடியும் கேட்பது ஞாயமல்ல; ஆகையால் விதுர ராசனிடம் சென்றேன் நீ அவரை ஏகவசனம் சொல்லத்தாகாது காணும் துரியோதன மகாராசனே.

துற்சாதனன் சொல் தரு ரூபகம்

வரத்தகுமா அவரிங்கேவரத்தகுமா
ஐவரிங்கே வரத்தகுமா

இரவும்பகலும்சரகை பொசித்து
ஈனமடைந்தாரே இப்போது
வரம்பெற்ற யெந்தன்முன்
ஊரும்பதியும்கேட்க உள்ளத்தில் நினைத்தாரோ ஆ வரத்

காட்டிலேசஞ்சரிக்கப் போங்களென்றவரை
கூட்டிஅனுப்பினேனே அதைவிட்டு
நாட்டுக்குநாயக ராகுவோமென்றுன்னை
கூட்டியனுப்பி ருரே ஆ-வரத்

பத்திரண்டுமொன்றும் பதின்மூன்றுண்டாச்சு
பாண்டவர்பேச்சுமே பாராய்விட்டது
எத்தனம்வொன்றுக்கும் யீடேறமாட்டாது
இங்கேஅவர்வந்தாலுமே யிடமொன்றுகிட்டாது ஆ-வரத்

அம்பரர்போற்றுமென்னையன் சுந்தரீஸ்வரர்பாதம்தானறிய
சம்ப்ரமாய்கூறினேன் யெம்பிரானேயெந்தன்
சபையைவிட் டப்புரம்நட ஆ-வரத்

வசனம்

கேளுங்காணும் ஓய் கிருஷ்ணபகவானே! நீர் இவ்விடம் வரத்தகாது நான் நேற்றையதினமே சஞ்சயமகாமுனியிடம் சொல்லி அனுப்பிவிட்டேனே உன்னை ஏன் அனுப்பினார்கள் அவர்களை எப்போதும்போலே காட்டுக்குப் போகச் சொல்லும் நீரும் விதுரனுடனே நடவும் கிருஷ்ணமூர்த்தியே.

விதுரராஜன் சொல் விருத்தம்

பாதகதுரியாநீயும் பாரளந்தோன் முன்பாக
வேதனேப்படவேபேசி வேசியின் மைந்தனென்று
தீதாகயென்னேப்பேசி திடுக்கிடச்செய்ததாலே
சுயோதனு கேடுகாலம் நேர்ந்தது சொன்னேன்சொன்னேன்.

வசனம்

கேளடா பாதகா துரியோதன என்னே இந்த சபையிலே பகவான் முன்பாக வேசி மைந்தனென்றும் அவர் என்னிடம் வரத்தகாதென்றும் சொன்னுய். இனி நானிந்த பூமியில் நிற்பதுமில்லே. இதோ இந்த வில்லே எடுத்தொடித்தேன் பாரடா துரியோதன.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

வில்லேயுமுரிக்கலாமா விதுரராசனேகேளும்
புல்லியசப்தங்கள்செய்த பிழைபொறுக்காமல்நீயும்
வல்லாண்மையான நல்ல வாதுசேர்வில்லேயிந்த
நல்லோர்கள்முன்பொடித்து நான்பதம்போரேனென்ருய்.

வசனம்

கேளுங்காணும் விதுர ராசனே! சிறியோர்கள் செய்த பிழையை பெரியோர்கள் பொறுக்கவேண்டும். அதைவிட்டு துரியோதனன் பரிகாசமாக சொன்ன வார்த்தைக்காக உம்முடைய வில்லே முரித்துவிட்டு தபசுக்கு போரேனென்று சொல்லலாமோ விதுரராசனே.

சகுனி சொல் விருத்தம்

ஆசையில்மிகுந்தயெந்தன் அன்புள்ளமருமகனேகேளாய்
காசிக்குவுதவில்லாத காளேகள்ஐவருக்காய்
தேசமாய்தூதுவந்த நெடியோனேக்கூட்டிவந்து
வீசியேசபையில்செய்த வேடிக்கையறிந்திட்டீரோ.

வசனம்

கேளும் ஆசை மருமகனுன துரியோதன மகாராசனே! காசிக்காக விஷயத்துக்கும் உதவியில்லாத பாண்டவர்க்கு தூது வந்தவனுக்காக பொசிப்பளித்து அவமரியாதையோடு அழைத்து வந்ததும் அல்லாமல் தன் வில்லே முறித்த வேஷத்தைப் பார்த்தீர்களா மருமக்களே.

விதுரராசன் சொல் விருத்தம்

தகைமையில்லாமல்பேசி தாரணியாளயெண்ணி
அகங்கொண்டதுரியாநீயும் அரசும்உன் ஆண்மைகெட்டு

சுகங்கெட்டுசகுனியாலே செல்வமுமழியப்போராய்
பகைவைத்துபேசியேநான் பாரடாதவமேபோரேன்.

பொது விருத்தம்

விதுரரும்சபையைவிட்டு வேகமாய்போனபோது
மதுசூதனனெழுந்து மண்டலேஸ்வரனைப்பார்த்து
பொதுவாகப்பாண்டவர்க்காய் புகழ்பெறதூதுவந்தேன்
ததியிது அவர்கள்நாட்டை தருகுவாய்தருகுவாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு அடதாளம்

தருகுவாய்நாட்டை ஐவர்களுக்காய்
நான்வந்துகேட்டேன்

மகானுபாவனே மகாப்பிரபுவே
நான்வந்து கேட்டேன் தரு

தருகுவாயவரிட தாயாதிபக்ஷத்தை
மருவிலாமலேயீந்தால் மகிழ்ச்சியாயிருக்கலாம் தரு

முந்தியவர்க்குசொன்ன மொழிதப்பாமல்படிக்கு
சந்தேகம்வையாமல் சரேலென்றுமரியவே தரு

பேச்சுதவறிடாமல் பெரியோர்கள்முன்பாக
பாச்சிகையால்பறித்த பார்த்திபனைடவர்க்கு தரு

பேசும்பீஷ்மாச்சாரி துரோணாச்சாரிமுன்பாக
வீசுங்கையேந்தினேன் வேறொன்றும்சொல்லாமல் தரு

தப்பித்தகைமையாக சதுராகவாழ்குவாய்
அம்புருஷனைமெச்சி கெம்பீரங்கொள்வார்கள் தரு

சந்திரகுலத்தரசர் சரியானவரென்று
எந்தஅரசர்களும் முந்திதுதிசெய்வார்கள் தரு

தாரணிபுகழ்கின்ற தலங்கைநகரில்வாழும்
ஷீர்பார்சுந்தரீசர் தானறியவேயிப்போ தரு

சகுனி சொல் விருத்தம்

கெஞ்சியேயிடையனிங்கு கேழ்க்கவேவந்தான் நாட்டை
அஞ்சியேயவனுக்காக அளிப்பதற்கிடங்கொடாதே
பஞ்சையாய்போனவர்க்கு பாரேதுசுகந்தானேது
சஞ்சலமாகப்பேசி சபையைவிட்டோட்டுவாயே.

வசனம்

கேளும் ஆசை மருமகனான துரியோதன மகாராசனே இந்த இடையன் மெள்ளத் தலையை தடவ வந்தான் அவனுக்கு அஞ்சி இடங் கொடுக்கப் போருய் பத்திரம் மருமகனே.

துரியோதனனுக்கும் கிருஷ்ணருக்கும்
தர்க்கம் அடதாளம்

பாண்டவர்களுக்காக பரிந்துவர நியாயமுண்டோ
ஆண்டுபதிமூன்ருச்சுது அவர்க்குகாடேவீடாச்சுது
அப்பார்விட்டுயிப்பார்வர தப்பாகும்நீ ஒப்பாதுபோ-பா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

போபோவென்றுசொல்லியே நீபூமிதனையாண்டிருந்தால்
தாபமாகிபாண்டவர்கள் தானெனையனுப்பினர்கள்
தாரும் அவர் ஊரும்பதி தேரும்சுகம்வாருங்காணும்-போ

துரியோதிரன் சொல் தரு

கள்ளத்தனம்பேசியிங்கே மெள்ளத்தொடவந்தாயேநீ
எள்ளளவும்ஈயயெனது உளம்வரவில்லையேநீயோ
ஏதோவுந்தன் சூதோ அவர் வாதோவந்ததோயினி—கள்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

சூதாகவேவந்தேனென்று வாதாகவேபேசுகிருய்
தாதாவாயிருந்துநீயும் காதகமேபேசிவிட்டால்
கண்டவர்கள் துண்டனென்று மண்டியேவெதுண்டிடுவார்—சூ

துரியோதனன் சொல் தரு

அச்சமதுவையாமலே கட்சியாகப்பேசுகிருய்
இச்சபையைவிட்டுயிப்போ தக்ஷணம்நடந்துவிடும்
இங்கேநின்ருல்பங்கம்வரும் தங்காதேநீசொல்லாதேபோ—அ

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

தரிகரிதரியென்றுசொல்லி பொங்கமுடன்பேசினுயே
மங்களகரமாயிது திங்கள்குலதுங்கவனே
சீரிஎதிர்வாரியைப்போல் தாறுமாருய்பேசுகிருய்—தரி

துரியோதிரன் சொல் தரு

முந்தியேவிதுரன்வீட்டில் தங்கிநின்றுவந்தபோதே
தொந்திரவுசெய்துவைப்பேன்சொந்தமென்றுஎண்ணிவிட்டேன்
சோதிபெருங்ஆதிசிவ நாதரறியகூறினேன்யான்—முந்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

ஆதிபெரும்சோதிசிவ நாதரறியசொன்னவனே
மேதினியறியுமிந்த மூவர்கள்தானறிவார்
முற்பகையைவிட்டுஉளந்தன் சொற்படிகேளுமன்னு—ஆ

துரியோதிரன் சொல் தரு

நாட்டினைக்கேட்கவந்த நடத்தையைப்பார்த்தாலிங்கே
தோட்டுத்துக்கீரைசும்மா தொங்குதென்றோடிவந்தாய்
காட்டினில்திரிந்துகந்த மூலத்தையுண்டவர்க்கும்
பாட்டையேயிதுதானென்று பண்பாககாட்டவந்தாய்-நா

வசனம்

கேளுங்காணும் ஓய் கிருஷ்ணபகவானே! நீ நாட்டைக் கேட்க வந்ததைப் பார்த்தால் புழைக்கடை கீரையைப் பறிக்கவந்தவர்போல் காணுது காட்டில் திரிந்தவர்க்கு நாட்டைக்காட்ட வந்தவர்போல் காணுது, நடவுங்காணும் கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

மன்னவர்க்கெல்லாம் மன்னனுகியநீயும்
வாழ்ந்தும்செங்கோல்செலுத்தி வாதுகள்பேசுராய் மன்

சொன்னவார்த்தையைமறந்தான் சுயோதனனென்பார்கள்
தன்னையனுசரித்துதாரும் ஐவர்கள்நாட்டை மன்

காடுசென்றுரென்றும் கனிகாய்புசித்தாரென்றும்
நாடும்பூமியும்தர ஞாயமில்லையேயென்றும் மன்

அரக்குமாளிகைகட்டி அதிலென்னசுகங்கண்டாய்
கறுத்தவிஷத்தைப்பூட்டி கனவசிநாட்டிப்பார்த்தாய் மன்

இரணியன்ராவணன் இடும்பன்பக்காசூரன்
தருணமறியாமலே தான்கெட்டதறியாயோ மன்

பாண்டவர்கள்சிறிய பசங்களென்றெண்ணுதே
காண்டாவனமழித்த காளையைபழியாதே மன்

பாஞ்சாலன்சபையில்முன் பார்த்தாயேயவன்கையை
காஞ்சிரத்தைப்புசித்தால் கடைத்தேறமாட்டாயே மன்

அரவாபரணனவன் எண்ணத்தலங்கைவாழ்
பரமபாதன்சுந்தரீசன் பாதமநியச்சொன்னேன் மன்

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தல்

நல்லதுசுயோதனனுவுன் நியாயமேநியாயம்கண்டாய்
வல்லாண்மைபேசிஐவர் வரத்தகாதென்றுசொல்லி
எல்லாம்நீகைக்கொண்டாக்கால் ஏற்குமேயிதுவுனக்கு
பொல்லாப்புக்கிடமுண்டாகும் பொறுங்காணும்பதறவேண்
[டாம்.

வசனம்

கேளுங்காணும் துரியோதனராஜனே! நல்லவார்த்தை சொன்னாய் சொன்னபடி நாட்டைக் கொடுத்தால் சுகமாய் வாழலாம் இல்லாவிட்டால் வீணானபகை நேரிடுங்காணும் துரியோதன மகாராசனே.

துரியோதனனுக்கும் கிருஷ்ணனுக்கும்
தர்க்கம் தரு அடதாளம்

பாண்டவர்க்காகநீதூது யிங்கே
பரிந்துவந்தது தகாது
ஆண்டுபதின்மூன்றுமே லாகியேவிட்டது
அதற்குயிங்கேவர ஞாயமுங்கிட்டாது-பாண்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

வந்ததினாலென்னகோபம் உன்மனதுக்கு
வந்தேன் உன் மனஸ் தாபம்
சந்திரகுலத்தோர்க்கு முந்தியுரைத்தபடி
தந்தநாட்டைக்கேட்க எந்தனையனுப்பினார்-வந்

துரியோதிரன் சொல் தரு

ஓட்டிவிட்டேனான் • காட்டினில்யிப்போது
உரம்பெற்றுவந்தாரே நாட்டினில்
கரடிபுலிக்குஆட்டை நாட்டைக்கேட்கவந்தாய்
மோட்டுப்பூச்சிக்கிங்கே கூட்டம்பயப்படாது-பாண்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

சிங்கமானாலு மிப்போதே-அது
செப்பியவார்த்தை தப்பாதே
பங்கமாய்முன்பேசி பார்மன்னன்முன்வீசி
பங்கவைத்துயேன் நீ வல்லடிவழக்கேன்சீ-வந்

துரியோதனன் சொல் தரு

வாருவாருமென்று பேசிவெகு
வணக்கமுடனே கைவீசி
கோரும்படிக்குகை அடவமாட்டாது
குருடனுக் தப்போட்ட பொருளுமகப்படாது-பாண்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

போட்டுப்பொருள்வருமென்று மன்னாவுமை
கேட்டுவரும்படி சொன்னார்

கூட்டமாய்கூடியே நாட்டினையாண்டால்
வேட்டகத்தோர்மிக நாட்டம்கொண்டிடுவார்கள்-வந்

துரியோதனன் சொல் தரு

பஞ்சதந்திரவார்த்தைகள்பேச யிங்கே
கெஞ்சுராய்மெள்ளவே சீசீ
அஞ்சுபேர்களும் அளித்துவிட்டேன் நாட்டை
சஞ்சரிக்காமலே சாமுண்டியேன்வந்தாய்-பாண்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

வணங்காமுடிபெற்றீரா யெந்தன்
வார்த்தைதள்ளாதே கெம்பீரா
இணங்காதஉம்பிட மெழில்சபைதன்னிலே
ஏந்தினேன் என்னிட மாந்துளிர்கரங்களை-வந்

துரியோதிரன் சொல் விருத்தம்

ஓடிதான்போனவர்க்கு உலகேதுஊர்தானேது
தேடியபொருளுமேது சேரவுங்குடிசையேது
மூடியகாடுசென்று முன்னுன் குலரான்டாச்சு
பாடியேநூல்படிக்கு பாராச்சுநடவுங்காணும்.

வசனம்

கேளுங்காணும் ஓய் கிருஷ்ணபகவானே! காட்டுக்கோடி பிழைத்தவர்கள் நாட்டுக்கு வர ஞாயமுண்டோ மேலும் பதி மூன்று வருஷம் ஆனபடியால் நூல்படிக்கு பாராய்விட்டது நடவுங்காணும் ஓய் மாமா.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

வந்துபோகவா சும்மா வந்துபோகவா
சுயோதன வந்துபோகவா

தந்தவர்களிங்கே வரக்கூடாதா
வையகமவராள மனதுதாளாதா
முந்துசொன்னவுரை மொழிகேளாதா
மூர்க்கம்வந்து மனதுதோணுதா முடுகு
ஐவரைக்காட்டி லனுப்பும்போது
அந்தபீஷ்மர் அருகிலிருக்க
நொய்யவரை பேசலாமா
நொந்தவரைமனம் நோகச்செய்யலாமா-வந்து
போனவர்களிங்கே வரக்கூடாதென்று
பெரியோர்கள்முன்னே சொன்னசொல்லேதென்றும்-வந்

கானகத்தில்போய் யிருந்துவந்தாரென்றும்
காரியவீரிய காரரென்றும்சொன்ஞல்-வந்

பொங்கியேவெகுண்டு பேசிஞயது
பூமிக்குஏற்குமோ எங்கள்-வந்

மங்கைபங்காளன் சுந்தரீஸ்வரர்
மனதுக்கேற்குமோ சொல்-வந்

கிருஷ்ணபகவான் சொல் விருத்தம்

சொல்லியபடிக்குநாட்டை சுகுணமாயீந்தால்போதும்
அல்லதுஅவர்களுக்கு ஐந்துஊர்கொடுக்கப்பாரும்
இல்லாமற்போஞலைந்து இடமதுவிடவேசெய்யும்
வல்லவாயோசித்தெந்தன் வார்த்தையின்படிசெய்வாயே.

வசனம்

கேளும் துரியோதன மகாராஜனே! சொன்னபடிக்கு அவருடைய நாட்டைக் கொடாத பக்ஷத்தில் ஐந்து ஊராவது ஐந்து மனையாவது கொடுத்தால் நன்ருயிருக்கும் யோசித்துச் சொல்லும் துரியோதன மகாராஜனே.

துரியன் சொல் வசனம்

சரி சரி பளா பளா நன்ருய் சொன்ஞய் நன்ருய் சொன்ஞய் அந்த பாண்டவர்களுக்கு இந்த பூமியில் ஈயிருக்குமிடம் கொடுக்க மாட்டேன் நட நட.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

ஈயதுமிருக்கபூமி யிட மதுகொடுக்கோமென்று
வாயிஞல்சொல்லிப்போட்டு வையகத்தைநீயாண்டாக்கால்
தாயிலாபிள்ளைபோல தவிர்க்கின்றஐவர்பங்கை
காயமேசெய்யாவிட்டால் கைதட்டிதாருமன்ஞ.

துரியராஜன் சொல் விருத்தம்

கைதட்டிதாருமென்று கணக்கவேஎதிரில்நின்று
மெய்கெட்ட இடையாநீயும் மேன்மையாயவர்களுக்காய்
வைகட்டும்திருடர்போலே வாதுகள்புரியலுற்ருய்
மேட்டில்புரளுகின்ற மடையாபேசாதேபோபோ.

கிருஷ்ணருக்கும் துரியனுக்கும் தர்க்கம் கரு அடதாளம்

தட்டுங்கையையென்றுசொல்லி சட்டமுடன்பேசவந்தாய்
எட்டிஞல்குடுமிகையில் தொட்டுப்பார்க்கவந்தாயேநீ-தட்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

தொட்டுப்பார்க்கவந்தேனென்று ஒட்டாரமாய்பேசுகிருய்
பட்டாபிஷேகரைவர் விட்டுவிடுவாரோசும்மா-தொ

துரியன் சொல் தரு

ஆஆநல்லவார்த்தைசொன்ருய் யறிகிறேனவர்திறமை
பாகம்பெற்றுபோவதற்கு பலமுண்டாச்சோ ஓஓ-தட்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

ஓஓ ஆஆ என்றுசொல்லி ஊமைத்தனம்பேசிநீயும்
பாசமாய்பேசிவிட்டு ஏகசக்ரமாளுவாயே-தொ

துரியன் சொல் தரு

ஊமையென்றுரைத்தவார்த்தை உனக்கவர்க்குமேதெரியும்
மோழையாகபோனவர்க்கு மேன்மையும்கிடைத்ததாமோ-தட

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

மேன்மையவர்க்கில்லையென்று மூடத்தனம்பேசுகிருய்
கானகம்திரிந்தாலவர் காரியம்வீரியம்போச்சே-தொ

துரியன் சொல் தரு

வீரியத்தைபார்க்கிறேன்காண் வேலையற்றுவந்தவனே
மாரனைஎரித்தசிவ மகாதேவர்ஒப்பார்போம்-தட்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

மாரன்சூரன்பட்டகதை வீரனேகேட்கலியோ
தாரும்கையைதட்டியிப்போ கோரும்சிவன்தானறிய-தொ

சகுனி சொல் விருத்தம்

மனதுக்கிசைந்தநல்ல மருமகனேகேளாய்நீயும்
தனியாகபேசிமெள்ள தலைதனைத்தடவிப்பார்க்க
இனிதாகயிங்குவந்தான் இடையன்சொல்கேட்டுநாமும்
கனிவாகஇடங்கொடுத்தால் காரியம்கெட்டுப்போமே.

வசனம்

கேளும் ஆசைமருமகனன துரியோதனராசனே இடையன் மெள்ள தலையைத் தடவவந்தான் அவனுக்கஞ்சி இடங்கொடுத்தால் காரியம் கெட்டுப்போகும் வேண்டாம் வேண்டாம்; பத்திரம் பத்திரம் துரியோதன மகாராசனே.

துரியன் சொல் தரு ரூபகம்

போடென்றுகைபேசிநான்
புத்தியைக்கொண்டாநான்
போஅப்பால்மடையா
காடேதிரிந்தந்த
கண்டுபுசித்தவர்க்கு
வீணய்பேசிநீயும்

யிடையாவுந்தன்
வெற்றிபெறுவது
போவென்று
கந்தமூலங்களை
வீடேதுபங்கேது
வேலையற்றுவந்தும்

சுரு. வீரத்தன்மையாய்பேசி
சிற்றவர்கள்சொன்னால்

கூறத்தகுமாஅந்த
வரத்தகுமோநீயும்—போ

அஸ்தினபுரிக்
அறிந்துநீ
கெச்சக்காயாடும்
கிட்டநெருங்கிநீ
சாஸ்திரரகஸ்யம்
தம்பியர்க்காக

கரசனென்றென்னை
தெரிந்துமந்த
பசங்கள்பேச்சைக்கேட்டு
வந்ததும்
தெரியாதமூடர்தர்மர்
வந்ததும்

சுரு. தக்காதது
நிக்காததுநீ

மிக்காதது
ஒக்காதுபோ—போ

சூதாடிஜெயிக்க
சேவகமுண்
செங்கோல்செலுத்தவும்
செப்பவுமுண்
தாதாவாய்நானு
தண்டெடுத்துமவர்

தெரியாதவர்க்கு
டாச்சுதேஇப்போ
பங்காளிதத்துவம்
டாச்சுதே
]மிருப்பதறியாமல்
சண்டைசெய்வாரென்று

சுரு. சதிராகவே
பொதுவாளனே

யெதிராகநீ
மெதுவாகநீ—போ

அங்கதேசத்துக்கதிபன்
அர்ச்சுனனைக்கொல்ல
அமுதளிக்
பொங்கமாயேத்தியே
போதும்போதுமுமது

ஆசைக்குகந்தகர்னன்
அரவத்தைவைத்து
கின்றவன்
கெதையினால்மதவீமனை
தூதும்சூதும்வறியேன்—போ

தையலாள்துரோபதை
தானோடிபோனார்களே
வையகம்நகைக்க
வாளெடுத்துசண்டை
வையகம்போற்றும்
வாசன்சுந்தரேசன்தாள்

தன்னாலேயீண்டவர்
யிப்போதரணி
தலையைக்குனிந்தாரே
செய்யாமல்போனாரே
தலங்கையில்வாழ்கின்ற
நேசமுடனேற்றும்

சுரு. வன்னியம்
பூண்டவனே

தண்டிளபம்
பாண்டவர்க்காய்-போ

துரியன் சொல் விருத்தம்

குருகுலத்தவர்களுக்கு கொடுமென்றநாட்டைபங்கு
மருங்கிலாலேவேந்தேன் மகாசபைதன்னில்நின்று
கருணைகூர்பாண்டவர்க்காய் கனிவாகயிங்குவந்து
பெருமையாய்கைபோடென்று பேசிஞய்நடவுங்காணும்.

வசனம்

கேளுங்காணும் ஓய் கிருஷ்ணமூர்த்தியே உன்னுடைய மடைய புத்திதனமோ அவ்வளவு பேசிஞயே யொழியவேறில்லே நீ அந்த பாண்டவர்க்காக யிப்படியெல்லாம் பேசுவது சரியல்ல சபையை விட்டு அப்பால் நடவுங்காணும் கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

மகிதலமுழுதுமாண்ட மண்டலேஸ்வரனேகேளாய்
விசனமாய்பாண்டவர்க்கு விளம்பியநாட்டைக்கேட்டால்
பகிரதப்பிரயத்தனமாக பாராச்சுதென்றுசொன்ஞய்
சுகிர்தமாயிதுவுமக்கு சுயோதனுசொல்லொணுதே.

வசனம்

நான் பாராச்சுதென்று சொல்லுவது சரியல்ல துரியோதன மகாராசனே யோசித்து சொல்லுங்காணும் நான் திரும்பி வருகிறேன் துரியோதன மகாராசனே.

பொது வசனம்

சுவாமியானவர் யோசனே செய்யுமென்று விதுரராசன் அரண்மனைக்குப் போய்விட்டார் அப்பால் சகுனியானவன் துரியோதனனுக்கு யோசனே சொல்லத் தொடங்கினவிதங்காண்க.

சகுனி சொல் விருத்தம்

கர்னனேதுரியோதனுகேள் காரியமொன்றுசொல்வேன்
சொர்ணமண்டபத்தில்முன்பு சூதாடிஜெயித்தாப்போல
நிர்வாணமாக்கிநாட்டில் நெடுந்துலேயோட்டிஞற்போல்
மர்மமாயுரைக்கும்சேதி வகைதனேகேளும்சொல்வேன்.

வசனம்

கேளும் அன்புக்கிசைந்த மருமக்கள்மார்களே நாம் முன் செய்த சபாமண்டபத்திலே பாண்டவரை சூதாடி ஜெயித்தாப் போல் இன்று இங்குவந்த யிடையனேக்கொல்லுவதற்கு யோசனே சொல்லுகிறேன் கேளும் துரியோதன மகாராஜனே.

சகுனி சொல் விருத்தம்

நிலவறையொன்றுநேமித்து அதினுள்
　　கொடியபலசாலிகள் அநேகமாய்வைத்து
மலைபோலநல்ல ஆயுதமவர்க்கு
　　மட்டில்லாமலே அநேகர்கைகொடுத்து
அலைகடல்துயின்ற ஆயனை நாமும்
　　அன்புடனிவ்விட பிக்ஷணமழைத்து
பலபலவிதமாய் உபசாரம்பேசி
　　பள்ளத்தில்தள்ளியே கொல்வோம்.

வசனம்

கேளும் மருமகனே நான் சொன்னபடி நிலவறை ஜோடித்து அதினுள்ளே நல்ல பலசாலிகள் கையில் ஆயுதங் கொடுத்து உள்ளே வைத்து மேலே ஆசனமிட்டு கிருஷ்ணனை அதின்மீதில் ஏறச்செய்தால் உள்ளே விழுவான் அப்படியே கொல்லலாம் மருமகனே.

துரியோதிரன் சொல் தரு அடதாளம்

இதுசரியோசனை மாமாசொன்னதிது
இதுசரியோசனை

ததியில்சொல்லுபவர் யார்யிந்தயோசனை
சபையிலுள்ளவர்களே பார்

சுரு. தந்திரயிந்திர ஞாலங்கற்றவர்
　　மந்திரவித்தை யனேகமறிந்தவர் இது

கர்னராசனே சொல்வேன்கேள் நமதுமாமா
கருத்தைமிகவே யேற்றுக்கொள்வேன்

சுரு. கட்டுவார்படை வெட்டுவாசொல்லால்
　　தட்டுவார்திசை யெட்டும்வெல்லுவார் இது

நிலவறைஜோடி ஒருநிமிஷத்திலாகவேண்டும்
நேமனம்சொற்படி ஆகையினலே

சுரு. ஓமர்தம்செய்ய தாமிஷம்செய்யலாமா
　　காமுகரேயிப்போ வீரியமாய்நாமுமே இது

துர்ச்சாதனப்புலியை வரவழைத்து
துருசாகவே முடித்து

சுரு. துடுக்காகிய முடுக்காய்கைதனில்
　　அடுக்காயாயுதம் கொடுத்துமேகொல்லுவோம் இது

நமக்குயெதிராய் வந்தயிடையனை
நாம்சற்றேஅறியவேணும் ஆகையினலே

சுரு. நாதராகியபோத	சுந்தரீசர்பாதம்
துதித்துமிப்போதே	முடிக்கலாம் இது

வசனம்

கேளும் கர்னராஜனே நமது மாமா சொன்னபடிக்கு முடிக்கலாம் ஆனபடியினலே நமது தம்பியாகிய துற்சாதனப்புலியை அழைப்பித்து வேலையை நடத்திவையும் கர்னராசனே.

கர்னராசன் சொல் வசனம்

அப்படியே செய்விக்கிறேன் துரியோதன மகாராஜனே.

துற்சாதனன் சொல் விருத்தம்

தொண்ணூற்ருென்பதுபேர்க்கெல்லாந் துரியனுய்விளங்குகின் [ருேன்
மண்ணுக்குள்யிவனைவெல்ல மகாராஜனுெருவரில்லை
பண்ணூத்தம்பாவைதன்னை பாரினிலிழுத்தழூர்க்கன்
கண்ணிலான்பெற்றெடுத்த காளைதுற்சாதனன்வருகின்ருனே.

துற்சாதனன் வருகிற தரு ரூபகதாளம்

துரியனுகிய துற்சாதனப்புலி
துரையும்வந்தானே அருள்

சுரு. துரைமக்களில்	முடிபெற்றவன்
சரியொத்தனல்ல	திடமுற்றவன் துரி
கவுரவாதிகள்யாவர்க்கும்	ஒருகண்ணுய்நின்றவன்
காம்பீர்யமாகியசுயோதனனது	கருத்துக்கிசைந்தவன்
நாவலர்மெச்சிடும்	சண்டப்ரசண்டன்
நான்குதிசையோர்க்கும்	மிண்டாரமிண்டன்
சுரு. நயவஞ்சகன்	கெடுதிசெய்பவன்
தயவற்றவன்	சதியுற்றவன் துரி
காவலன்யேமனுக்கு	மஞ்சாதீரன்
காண்பீர்சண்டப்ரண்ட	உதாரன்
வேலும்வாளும்வில்லும்	தாக்கியசூரன்
வேந்தர்கள்யாவர்க்கும்	வீராதிவீரன்
சுரு. விடநாகம்போல்	மனமுள்ளவன்
படுபாவியின்	மனமுள்ளவன் துரி
தொண்ணூற்ருென்பதுபேரிற்	கொடூரன்
பண்ணோர்கள்வாழ்த்தும்	பராக்ரமமாரன்
பாரினிலுற்றவர்	மெச்சுமுதாரன் துரி

துற்சாதனன் சொல் வசனம்

சரணஞ் சரணமண்ணுவே! அடியேனை அழைத்த காரியம் இன்னதென்று சொல்லுவாய் அண்ணுவே.

துரியோதனராசன் சொல் வசனம்

ஆனுல் சொல்கிறேன் கேளும் துற்சாதனு.

துரியோதிரன் சொல் தரு அடதாளம்

சொல்லுகிறேன்கேளுமெந்தன் சொற்கிசைந்ததம்பியரே
மல்லுசெய்யவந்தயிங்கு மடையனையாம்கொல்லுதற்கு-சொ

நிலவறைமுடித்துவைந்து நிகரிலாபலரைவைத்து
பலபலஆயுதம்தந்து பள்ளத்திலழுந்தும்படி-சொ

ஞஸ்திரமதாகவொரு நேற்றியதாய்சிம்மாசனம்
பார்த்தவர்கள்மெச்சநம்மை கீர்த்தியைகொண்டாடும்படி-சொ

ஏறினுல்நிலவறை யிடிந்துவிழசெய்யவேணும்
கோரியபடிக்குயவன் குரவனையறுக்கவேணும்-சொ

மாமாசொன்னநேமப்படி தாமதம்செய்யாமலேநீ
ஏமாற்றிஇடையன்வந்த சாமர்த்தியமறியவேணும்-சொ

சத்தியுடன்கூடியிருக்கும் சங்கராம்சுந்தரீசர்
நித்தியமனைபோற்றிசெய்து பத்தியுடனிப்பொழுது-சொ

வசனம்

கேளும் தம்பி துற்சாதனப் புலியே! இப்போது நமது மாமா சொன்னபடிக்கு ஒரு நிமிஷத்திலே நிலவறையென்னும் சுரங்கஞ் செய்து அதினுள் நல்ல பலசாலிகள் கையிலே ஆயுதம் கொடுத்து உள்ளே மறைத்து மேலே அந்த இடையனை உட்காரவைத்தால் உள்ளே விழுவான். அவனை அப்படியே கொல்லலாம். ஆகையால் ஒரு நொடியில் முடித்து வையும் தம்பி துற்சாதனு.

துரியோதிரன் சொல் விருத்தம்

மாமாவின்சொற்படிக்கு மகிழ்பெறசெய்வதற்கு
தாமதமினிவேறுண்டோ தயாநிதியண்ணுகேளாய்
ஏமாற்றிகுழியில்தள்ளி இப்பவேகொல்வதற்கு
நேமகப்படிநானும் நிலவறைஜோடிப்பேனே.

வசனம்

கேளும் எனது அண்ணுவே! மாமா சகுனியின் வார்த்தைப் படி ஒரு நிமிஷத்தில் நிலவறை செய்து முடிக்கிறேன் பாரும் எனது அண்ணுவே.

துற்சாதனன் சொல் விருத்தம்

சொல்லுநீர்வருவதற்குமுன்னே ஜெகமதுபுகழவிப்போ
வல்லவாசுரங்கம்தன்னை வாகுடன்செய்துவைத்தேன்
மல்லுக்குவந்தஅந்த மடையனையிட்சணத்தில்
நல்லதோர்வார்த்தைசொல்லி நமதிடம்வரச்செய்வாயே.

வசனம்

ஆஆ வாருமண்ணுவே! தாங்கள் சொல்லியபடி நிலவறை முடித்து வைத்தேன். அந்த இடையனை நயமாய்ப் பேசி வர வழையு மண்ணுவே.

துரியோதிரன் சொல் விருத்தம்

இங்கிருந்தெழுந்துபோன இடையன்பாலேகிநீங்கள்
பொங்கமாயழைத்தேனென்று போயந்தவிதுரன்வீட்டில்
தங்கியேயிருப்போன்தன்னை தட்சணமிச்சபைக்கு
மங்களகரமாய்ப்பேசி மடையனையழைத்துவாரீர்.

வசனம்

ஆஆ வாருங்கள் சேர்வைக்காரரே! இங்கு வுந்து போன இடையன் விதுரன் வீட்டிற்குப் போயிருக்கிறுன்; அவனை நான் அழைத்தேனென்று சீக்கிரமா யழைத்து வாருங்கள் சேர்வைக் காரரே.

சேர்வைக்காரன் சொல் வசனம்

இதோ அழைத்து வந்தோம் சுவாமி கர்த்தனே.



துரியோதனன் கிருஷ்ணமூர்த்திக்கு சொல் வசனம்
வாருமாமா ஓய் கிருஷ்ணபகவானே வாரும் வாரும்.

துரியராஜன் சொல் விருத்தம்

உச்சிதமான நல்லஉயர்சிம் மாதனம்ஜோடித்தேன்
பட்சம்வைத்தடியேன்மீதில் பாங்குடன் வீற்றிருப்பாய்
கட்சியாய்சொன்னேனென்று கருத்தினில் நினைக்கவேண்டாம்
அட்சயம்போலேயிந்த ஆசனம்கேளாய்சுவாமி.

வசனம்

கேளும் மாமா கிருஷ்ணமூர்த்தி உமக்கு மரியாதை செய்ய வில்லை என்று மனவருத்தமாய் போய்விட்டீர்; ஆகையால் இதோ ஒரு அலங்காரமான சிம்மாதனம் செய்துவைத்தேன் அதன்மீது ஏளாய் சுவாமி!

வசனம்

ஆனால் அப்படியே ஏறுகிறேன் பாருங்காணும் துரியோதன மகாராஜனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு அடதாளம்

ஏறுகிறேன்பாருமன்னா கோரியபடிக்குமன்னா
பாரும்நீரும்கண்ணால் கோரும்நிலவறைமீதில்கண்ணா—ஏறு

சூதாகவேகட்டிவைத்த சூஸ்திரநிலவறைமேல்
பாதாரவிந்தத்தைவைத்து பார்க்கிறேன்காண்யிப்போது-சுரு

துண்டகயோதனா உன்தூதுவர்கள்யாவரையும்
அண்டர்களுமெச்சிடவே அனுப்புகிறேன்காலனிடம்—ஏறு

கண்ணாகியபாண்டவர்கள் கருத்தைநிறைவேற்றிவைத்தார்
எண்ணிவந்தஎண்ணமதை ஈடேறவேசெய்துவைத்தார்
வீசியேவெகுண்டுமவர் விஸ்வரூபங்கொண்டவரும்
மாசிலாதயெம்பெருமான் மண்டலமட்டுமாய்வளர்ந்தார்-சுரு

அஷ்டதிக்கும்தானடுங்க கிருஷ்ணமூர்த்திகோபமதாய்
சொஸ்தமாய்தலங்கைவாழும் சுந்தரீசர்பாருமென்று-ஏறு

பொது தரு அடதாளம்

ஏறினார்பாரீர் நிலவறைமீதினி
லேறினார்பாரீர் கோபாலகிருஷ்ணர்-ஏறி

வாரியையுண்டிடும் வாசுதேவர்மைந்தரும்
கோரியதுரியன்சொல் குறைவராமலே-த்றி

தேவர்களிதைக்கண்டு
ஆவலாய்கொண்டாடி
திடுக்கிட்டுசுவாமியை
அனே வரும்பார்க்கையில்-ஏற்

நிலவறையருகினில்
கலவரங்கொண்டோர்க்கு
நேராகப்போய்நின்று
காட்டவேணுமென்று-ஏற்

ஊணிவொருபாதத்தை
நாணகிங்கிலியரை
உள்ளொருபாதம்விட்டு
நமன்பாலனுப்பவேண்டி-ஏற்

தலங்கைநகரில்
துலங்கியசுந்தரேசர்
தான்வந்துமேவியே
தேவனேயிருமென்று-ஏற்

பொது வசனம்

அகோதெப்படியென்றால் சுவாமியானவர் விஸ்வரூபம் கொள்ளுகிறவிதங் காண்க.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

ஆதிநெடுமாலவரும் கோபங்கொண்டு
அண்டமுதலதிர்ந்திடவே விஸ்வரூபங்கொண்டு
மேதினியிலுள்ளோர்கள் நடுங்க
மெரித்தெரிந்துநிலவறைக்குள் யிருந்தோர்தன்னை
சோதிபெரும்அமிர்தத்தைக் கடைந்தாப்போலே
துழாவவிட்டுஅவர்களுயிர் வாங்கிப்போட்டு
வேதனைகள்செய்திடவே ஆகாயமெங்கும்
வீசினாற்கைகளைமேல் வீசினாரே.

வசனம்

இவ்விதமாக சுவாமியானவர் விஸ்வரூபங்கொண்டு நிலவறைக்குள்ளிருந்த கிங்கிலியரை அறைந்துவிட்டு அதிக கோபமாகி நின்றபோது சபையிலே நின்ற யாவரும் பயந்து திடுக்கிட்டு நிற்கையில் திருதராஷ்டிரன் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

திருதராஷ்டிரன் சொல் விருத்தம்

பரியாசமாகமாமா பாரளந்தவரே உம்மேல்
அறியாதார்செய்தகுற்றம் ஆண்டவாபொறுக்கவேணும்
தெரியாதசிறுவருன்னை சேஷ்டைகள்செய்துபார்த்தார்
கரியமாலேக்ஷமித்துக் கடாக்ஷிக்கவேணும்சுவாமி.

பீஷ்மாச்சாரியார் சொல் தேவாரம்

அய்யனேலோகாராட்டியா அடியார்மேல்கோபமாகி
கையிலாகாதார்முன்பாய் ககனமட்டோங்கிநின்றாய்

மெய்யனேதயவுசெய்து மேதினியில்என்முன்நிற்க
செய்திடும்மனமிரங்கி தேவனேபோற்றிபோற்றி.

பீஷ்மர் தரு ரூபகம்

கோபம் பொறுத்திடும் தேவா சுவாமி
கோபம் பொறுத்திடும் தேவா

பாபஜென்மமெடுத்து இந்தப்படிக்குழன்று
கூவிஅவர் ஊரில் மனஸ்தாபமாகிநின்றோம்
தயவுசெய்தருள் புரியநீரும்-கோ

உந்தன்சொரூப மறிவதற்கு
ஒருவர்திறமா பெருமையேற்க
சிந்தைநொந்துநாம் கூவியழுகுறோம்
தேவனேயெங்களை யாவலாய்காருமே-கோ

அண்டமட்டும்நீர் வளர்ந்துநின்றவா
அறியாதார்மீதினில் கோபங்கொண்டவா
துண்டர்கள்செய்த பிழையேபொறுமே
தெரிசனம்இப்போ கொடுக்கவாருமே-கோ

ஆறுதப்புநூறுபிழை யென்றுசொல்லும்
அகிலத்துரைப்போல்வாரும் இப்போதுகண்பாரும்
சுந்தரீசரைக்கோரும் முருகன்சொல்மருதலில்லாமல்-மகா

வசனம்

அகோதெப்படியென்றால் பீஷ்மாச்சாரியர் சுவாமியைத் துதித்த மாத்திரத்தில் சுவாமியானவர் மனமிரங்கி நாம் இப்படி செய்தால் காரியம் எப்படி நடக்குமென்று யோசனை செய்து நிற்கையில் சகுனியானவன் துரியோதிரனுக்கு சொல்லுகிற விதங் காண்க.

சகுனி சொல் விருத்தம்

பேதைபோலேங்கிநீயும் பின்வாங்கியிடையனுக்காய்
வேதைகள்பட்டுநீரும் வேந்தனே நிற்கலாமோ
தாதுவேநீர்படைத்ததாஷ்டீகமெங்கேபோச்சு
நாதனேஅவனையிப்போ நடந்திடச்செய்குவாயே

வசனம்

கேளும் என்னுடைய மருமகனுன துரியோதன மகாராஜனே இப்போது அந்த இடையன் காட்டிய ஜாலவித்தைக்கு மனந்தளர்ந்து நிற்கலாமா உம்முடைய சவுரிய பராக்கிரம மெங்கே போச்சு ஏன் மலைக்குறீர் அவனை ஓட்டும்படி கை தட்டிகொடும் மருமகனே சரி.

துரியோதிரன் சொல் விருத்தம்

சண்டைக்குகையைத்தட்டி தருகுவாயென்றுசொல்லி
துண்டர்கள்பேச்சைக்கேட்டு துருசாகவந்ததாலே
அண்டருமறியயுன்னே அவமானப்படுத்திவைத்தேன்
புண்டரீகனே நானிப்போது போடுரேன்பாராய்கையை.

வசனம்

கேளும்காணும் ஓய் கிருஷ்ணபகவானே அந்த பாண்டவ ளுக்காக கைதட்டிடென்று சொன்னபடியினலே உமக்கு இந்த அவமானம் கிடைத்தது. அவர்கள் வந்தால் அவர் திறமை அறிகிறேன். ஆகையால் இதோ போடுகிறேன் பாருங்காணும் கையை.

துரியோதிரன் சொல் தரு ரூபகதாளம்

ஆனல்கையடிக்கிறேன் பாராய்யெந்தன்
ஆசாரவாச லழகிய தூணின்மேல்-ஆன

காடாளஅவரை அனுப்பிவிட்டேன்
தானகவேவந்தார் மானமில்லாமலே
வானடவகை செய்யமாட்டாரே
மனோகராஉந்தன் மதியும்கெட்டதோ-ஆன

யுத்தமுகத்தில் ஒருவகையறிகுறேன்
உண்மையி தென்றுசொல்லும்
தத்துவம்பேசியே விதுரனைக்கூட்டி
தானிங்கே வரச்சொல்லும்
கத்தரிக்காயை வழுதலங்காயென்று
கள்ளத்தனம்பேசி மெள்ளத்தொடவந்தால்
பித்தம்பிடித்தும்மை அனுப்பினபெரியோரை
புறப்பட்டுயென்முன் எதிர்ப்படச்சொல்லும்-ஆன

நாளையுதயத்துக்கு குருக்ஷேத்திரம்
நான்வந்து நிற்கிறேன்காண் அந்த
வேளையில்வந்தவர் பாளையம்கூட்டினல்
வேந்தர்களேசரி தான்களாமேளம்
சின்னம் தாரைகளூதிட
கங்கணம்கட்டிநான் பொங்கமாய்நிற்குறேன்
வாளினையேந்தியே மிக்கவேகாளிக்கு-ஆன

பத்துமொன்றும் பதினோக்ரோணி
சேனையைப்பார்த்து யிருப்பார்களே
மெத்தபலாட்டியர் தொண்ணூத்தொன்பதுபேர்
வீரமறி வார்களே

சாஸ்திரசாகஸ்யம் இல்லாதபேடிகள்
வெற்றிபெறுவாரோ நித்தியனேபாரும்
பக்தர்துதித்திடும் தலங்கையில்வாழும்
பரமன்சுந்தரேசன் உரமென்றேநானிப்போ-ஆறு

வசனம்

கேளுங்காணும் ஓய் கிருஷ்ணபகவானே நீர் அந்த பாண்டவர்களுக்காக என்னிடம் கையேந்தினபடியால் இதோ என் சபா மண்டபத்தின் முன்னின்ற தூணின்மேல் கைதட்டினேன் அவர்கள் சமர்த்தையறிவோம் வரச்சொல்லும் கிருஷ்ணபகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

சரிசரியிதுவேஞாயம் சமர்த்தரே துரியோதனுகேள்
பரிகரிதேர்கள்சேனை படையுடன்வருவதற்கு
நெரியதாய்நீயுரைத்த நேமகப்படியேநாளை
சரிவரஉதையத்துக் குருக்ஷேத்திரம்வருவார்பாரீர்.

(வ-ம்.) கேளுங்காணும் துரியோதன மகாராஜனே இது தான் சரி, நீ சொன்னவார்த்தை நல்லது, அப்படியே நாளை உதயத்துக்கு ஆனைசேனை பரிவாரங்களுடனே சமர் பூமியாகிய குருக்ஷேத்திரம் வருவார்கள் நான் போகிறேன்காணும் துரியோதன மகாராசனே.

கிருஷ்ணபகவான் சொல் விருத்தம்

பீஷ்மதுரோணுச்சாரி புகழ்பெறும் அஸ்வத்தாமன்
குக்ஷங்களறிந்துநல்ல சுகுணமாம்விகர்ணரேகேள்
ஆக்ஷியாய்தர்மருக்கு அவனிடம்தூதுவந்தேன்
தாக்ஷணியமில்லாமற்பேசும் சங்கதியறிந்திடுங்கள்.

(வ-ம்.) கேளும் வீஷ்மரே துரோணுச்சாரியரே அசுவத்தாமரே விகர்ண கிருபாச்சாரியரே எல்லாருக்கும் ஒரு கண்ணுய் விளங்கி பாண்டவர்களுக்காக நான் தூதுவந்தேன் என்னை பேசியதும் நடத்திய வேலையும் அறிந்திடுங்கள் சபையோர்களே.

பீஷ்மர் சொல் விருத்தம்

நாளையேதெரியப்போறேன் நடத்தியவாறுதன்னை
காளையர்ச்சுனன்கையாலே கண்டதுண்டங்களாக்கி
மூளையும்சிதறப்போருர் முழுதிலுமவரேயாள
வேளையும்வந்ததிப்போ வேருென்றும்நினைக்கவேண்டாம்

பீஷ்மர் சொல் தரு ஆதிதாளம்

பொறும்பொறும்தேவா பாண்டவர்க்குயிப்போ
வாரும்சுகம்தேவா

வறுமையில்மெலிந்து வாடிமனமெரிந்த
பொறுமைவீணுய்போகுமா பேரைவர்கண்ணீர்விடுமோ-பொ
அழிவுசெய்யநினைத்தான் அகத்தாலவனேகெட்டான்
பகடையாகயோசித்து பாராமலேபதைபதைத்தான்-பொ
சகுனிஉரையினுலே சகலருமழியப்போருர்
பிகுவுங்குலைந்துநானே போரில்மடியப்போருன்-பொ
உமதுஅருளிக்க ஒருகுறைவுவராது
பரமன்சுந்தரேசர் நாதரறியச்சொன்னேன்-பொ

வசனம்

கேளும் சுவாமி கிருஷ்ணபகவானே பாண்டவர்களுக்கு ஒரு குறைவும் வரமாட்டாது தாங்கள் மனதிலே ஆயாசம் வையாமல் போய்வாரும் சுவாமி கர்த்தனே.

பொது வசனம்

சுவாமியானவர் சபையைவிட்டு வரும்போது அஸ்வத்தாமரை அழைத்துவந்து சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

பார்த்தீரா அஸ்வத்தாமா பருதியின்விநோதம்தன்னை
நேர்த்தியாய்மேகம்கட்டும் மேர்மையிதென்னசொல்லும்
சீற்றீரேபாருமென்று சிறுவிரல்மோதிரத்தை
நாற்றிசைபுகழ்சூதாய் நழுகவேகீழ்விட்டாரே.

வசனம்

கேளுங்காணும் அஸ்வத்தாமரே இது என்னகாணும் இன்றைய பரிதியைச் சுற்றிலும் விசித்திரமான மேகங்கட்டியிருக்கிறதென்று ஆகாயத்தைக்காட்டி கணையாழியைக் கழட்டி பூமியிலே நழுகவிட்டார் அதைக்கண்டு அஸ்வத்தாமர் குனிந்து யெடுத்து சுவாமி கையிலே வைத்தார் அதைக்கண்டு சகுனியானவர் துரியோதனனுக்குச் சொல்லுகிற விதங்காண்க.

சகுனி சொல் விருத்தம்

பாண்டவர்க்காகதூது பரிந்துவந்தவன்பின்னுலே
தூண்டுகோலாகவேதான் துருசாகஅவனேடேகி
ஆண்டவாபாரும் அஸ்வத்தாமருமவர்க்கு
தீண்டியேபூமிதொட்டு செய்திட்டான்பிரமாணம்பாராய்.

வசனம்

கேளும் துரியோதனமகாராசனே இவ்விடம்வந்த அந்த இடையன் பின்னுலே இங்கிருந்த அஸ்வத்தாமர் எழுந்துபோய்

அவனுக்கு நாளை நடக்கும் யுத்தத்தில் நான் கெடுதி செய்கிற தில்லையென்று ஆகாயத்தைக் காட்டி பூமியைத் தொட்டு பிரமாணம் செய்தான். பாரும் பாரும் என் மருமகனே.

துரியோதிரன் சொல் விருத்தம்

என்னிடவுப்பைவுண்டு எனக்குரெண்டகமாக
சின்னமேபடுத்தவேண்டி செழுஞ்சபைதன்னைவிட்டு
கண்ணல்விதுரன்செய்த காரியம்போலநீயும்
அண்ணவர்அஸ்வத்தாமா அவனுக்குபிரமாணம்செய்தாய்.

வசனம்

கேளும் அஸ்வத்தாமரே! என்னுடைய உப்பையுண்டு எனக்கு ரெண்டகம் செய்து வந்தவன் பின்னாலே போய் நாளை யுத்தத்திலே உங்கள்பேரில் கையெடுக்கிறதில்லை யென்று பிரமாணம் செய்தாயல்லவா, போதும். சபையை விட்டு நடவுங் காணும். நட.

அஸ்வத்தாமர் சொல் விருத்தம்

குடிகேடன்சகுனியாலே குலமதுஅழிவதற்கு
முடிவானபடியினாலே மூண்டது அனர்த்தகாலம்
கெடுமதியாகஎன்னை கேளாதகேள்விகேட்டாய்
படுபாவிதுரியோதனா நான் பாரடாதவமேபோரேன்.

வசனம்

கேளும் துரியோதன மகாராஜனே! இந்த குலத்துக்கு எமனாக வந்த சகுனியாலே யாவற்றுமழிந்து போவதற்கு காலமான படியால் என்னை அவமதித்து பேசினாய். நானுங்கள் முகத்திலே முழியேன். இதோ நான் தபசுக்குப் போகிறேன். துரியோதன மகாராஜனே.

கிருஷ்ணமூர்த்தி குந்திதேவியிடம் வருகிற
தரு ஆதிதாளம்

தந்திரஜாலம்செய்திடும் சுந்தரகோபாலகிருஷ்ணர்
குந்தியிடம்வருகிறார் கோபாலகிருஷ்ணர்-தந்

தொந்தியம்குலுங்கமார்பில் சந்திர ஆரம்துலங்க
அந்தரர்துதித்தோங்க வந்தாரேஐவர்பொங்க-தந்

துஷ்டர்களைவேரறுக்க தோன்றியதோர்மூலாதார
இஷ்டம்வைத்தவரைகாக்க எண்ணிவந்தலோகபிராட்டியார்-தந்

சாஸ்திரமறிந்தகுண சகாதேவர்க்குசொன்னபடி
ஆஸ்தியாகபூமிகளை ஆளவைக்கஎண்ணபடி-தந்

சூதாய்மோசங்கள்செய்ய துரியனைவேரறுக்க
நாதனும்சுத்தரேசரிப்போ நடக்கவேணும்சொற்படிக்கே-தந்

பொது வசனம்

சுவாமியானவர் குந்தியிடம் வரும்போது குந்தியம்மாளான வள் வருகிற விதங் காண்க.

குந்திதேவி சொல் விருத்தம்

மதிகுலம்தனிலுதித்த பாண்டுராஜன்
பதிசாகவந்துதித்த பாவனையாம்குந்திதேவி
அதிபதியளித்தசெல்வி அரிவையர்குந்திதேவி
துதிபெரும்சபையைநாடி தோகையும்வருகின்ருளே.

குந்திதேவி வருகிற தரு ஆதிதாளம்

அன்னைகுந்திமாதேவி
சபையைநாடி
ஐவர்
ஐவர்களையளித்த
ஆவலுடன்வருகிருள்
பாவையிதோவாராள்

வைபகத்தைரக்ஷித்த
ஐயன்போனகதையை
வாரணத்தைக்கார்த்திட்ட
அன்பாயறிந்திட்ட ஐவர்

குருகுலம்தழைத்திட
மருவிலாபாண்டுராசன்
குந்திபேர்கெலித்திட
மறுதராய்பிடித்த ஐவர்

ஐந்துமந்திரமுற்ற
மைந்தன்கர்னனைப்பெற்ற
அழகுள்ளகுணசாலி
மகிழ்பெறும்புத்திசாலி ஐவர்

ஏழைகள் இடர்தீர்க்க
சேயிழைதனைக்காக்கும்
யெழுந்தருளியதேவர்
தேவனேசுந்தரேசா ஐவர்

வசனம்

வாரும் வாரும் எங்களன்புக்கிசைந்த மருமகனே! அஸ்தின புரிக்குப் போன சங்கதி யென்ன சொல்லும் மருமகனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

ஆசையாய்மாமிகேளாய் அன்புடனுரைப்பேனிப்போ
பாசமாயும்மைநாடி பரிந்துவந்திட்டசேதி
நேசமாய்ஐவருக்காய் நெடுந்தூதுபோனயிடத்தில்
வீசியேநடந்தசேதி விளம்புவேன்கேளும்மாமி.

வசனம்

கேளும் என் மாமி! அந்த பாண்டவர்களுக்காக துரியோ தனனிடம் தூது போய் அவர்களுக்கு முன் சொல்லிய நாட்டைக் கேட்டால் கொடேனென்ருன்; ஆகையால் சண்டைக்கு கை தட்டி வந்தேன். உன்ஞல் ஒரு வேலையாக வேணும் மாமி.

குந்திதேவி சொல் விருத்தம்

என்னலேயாகும்வேலை யியம்பினலுமதுயிஷ்டம்
சொன்னப்போல்யானும் செய்வேன்சுந்தரலோகாராட்டி
பன்னகசயனுயெந்தன் பாலரும்பூமியாள
கண்ணலேபார்க்கச்செய்யும் கரியமால்மருமகனேநீர்.

வசனம்

கேளும் என் ஆசை மருமகனே என்னல் ஆகவேண்டிய வேலை யென்னமோ சொல்லும் மருமகனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

ஆனல் அப்படியே சொல்லுகிறேன் கேளும் மாமி.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

உமதுமகன்கர்னனிடம் முன்புயேகி
ஒருகணையேஅர்ச்சுனன்மேல் மறுகணைக்கு
இடமதுவையாமல்வரம் வாங்கவேண்டி
எழிலானமாமியாரே அதற்காய்வந்தேன்
சமர்செய்தான் அர்ச்சுனன்முன் காண்டாவனத்தில்
சபதமதுசெய்தவரவம் விடமாட்டாது
தவசீலன்கர்னனிடம் இப்பவேபோய்
தனித்தொருவர் தெரியாமலவனிடத்தில்
அமரரறியபிரமாணம் வாங்கிவந்தால்
ஆகும்என்னலர்ச்சுனனை மீட்கச்செய்வேன்
சுகமாகவேரொன்றுஞ் சொல்லாமல்போய்
சீக்கிரமாய்வாருமென்று சொல்லிப்பின்பு
நமன்நாராயணமூர்த்தி இன்னம்வேண
நடக்கவேண்டிய கதையைசொல்லிப்பின்பு
உபலாவியந்தனிலிருக்கும் பாண்டவர்க்குமுன்னே
உரைக்கின்றர்போனகதை உரைக்கின்றரே.

வசனம்

கேளும் மாமி சிறுவயதா யிருந்தநாளையில் சூரியன் அருண மந்திரத்தை உச்சரித்தபோது ஒரு குழந்தை கிடைத்ததல்லவா அதை நீ ஒரு பெட்டியில் வைத்து கங்கையில் விட்டாய் அன்று முதல் இன்றைய பரியந்தம் துரியோதனன் சம்பத்திலே யிருக்கிருன் அவன்தான் உமது மூத்த குமாரன் கர்ணன். அர்ச்சுனனை கொல்வதற்கு காண்டாவன தகன காலத்திலே தப்பிப்போன அரவம் அவனிடம் போயிருக்கின்றது. அதுவோ அர்ச்சுனனை விடமாட்டாது. ஆகையால் நீ கர்ணனிடம் போய் ஒரு கணைக்கு

மேல் மறு கணைவிடாமல் வரம் வாங்கி வந்தால்தான் முடியும் அர்ச்சுனன் பிழைப்பான் என்பேரில் பழிசொல்லவேண்டாம் நீர் போய்வாரும் மாமி.

குந்திதேவி கர்ணனிடம் வருகிறதரு ஆதிதாளம்

சுந்தரமாகிய குந்திதேவியும்
சுதன்தனைத் தேடிவாராள்

முந்தியவதரித்த மைந்தனைக்கண்டுநான்
சிந்தையுருகிட வந்ததே அரிகரி-சுந்

பேழையில்வைத்தயென் புதல்வனிவன் தானென்று
ஆழிதரித்தயென் அய்யன்உரைத்தானின்று-சுந்

அஸ்தினபுரிதேடி அன்புமனதுவாடி
ஜேஷ்டபுத்திரனுக்கு சேதிசொல்லநாடி-சுந்

கருமலரணிந்திடும் நாதசுந்தரேசரே
வறுமையைநீக்குவீர் வந்துயெங்களைகாப்பீர்-சுந்

வசனம்

அகோதெப்படியென்றால் குந்திதேவி கர்னனுடைய அரண்மனைக்கு வரும்போது கர்ணன் எதிர்கொண்டு குந்தியம்மாளை வணங்கும்போது குந்தியம்மாள் சொல்லுகிற விதங்காண்க.

குந்தியம்மன் சொல் விருத்தம்

என்வயிற்றினிலுதித்த யெழில்பெறுமகனேகேளாய்
உன்னை நான்பிரிந்துயிப்போ வுயிர்கொண்டுவாழலாச்சே
சின்னபோதுதித்தயெந்தன் செல்வனேயுனைப்பிரிந்து
அன்னிதமாக்கியுன்னை யரும்பாவியாகினேனே.

வசனம்

கேளும் என் செல்வமே உன்னை நான் சிறுவயதில் சூரியருடைய மந்திரத்தால் என்னுடைய கன்னம்வழியாக அவதரித்தாய் அப்போது உன்னை பெட்டியிலே வைத்து நதியிலே விட்டேன் இப்போது நீ இங்கிருப்பதறிந்து வந்தேன் மகனே செல்வமே.

கர்ணன் சொல் விருத்தம்

எனக்குநீதாயானால் யிப்படி நடப்பதென்ன
மனக்குறைபட்டுஐவர் மனம்வாடி நிற்பதென்ன
இனத்தைவிட்டகலநீங்கி நான்யிழிவுக்காளாவதென்ன
கனத்தயென்தாயேயந்த காரணமுரைசெய்வாயே.

வசனம்

கேளும் என்னைப்பெற்ற அம்மணி தாங்கள் எனக்கு தாயானது நிச்சயமான விபரம் தெரியச்சொல்லு அம்மணி.

குந்திதேவி சொல் தரு அடதாளம்

அறிகிலேன் மகனே யிதுவரையில்
அறிகிலேன் மகனே உன்னை அறி

அறிகிலேனுந்தனை குருகுலத்தானென்று
சரிவிழுத்தமிடுத்து பெருகும்பாலைக்கொடுத்து அறி

கண்டவர் நகைத்திட காலம்வந்துதேயுன்னை
புண்டரீகர்வந்து புதல்வனிவன் தானென்றார் அறி

கதிரவனுலுதித்த கண்ணேகர்ணா உன்னை
எதிராளிவசம்யீந்து யிருக்கவைத்துதே தெய்வம் அறி

அன்னாளில்பெட்டியில் அடக்கம்வைத்துவிட்டேனே
இன்னாளாகயிங்கே யிருந்துநீவளர்ந்து அறி

தேசத்தரசனுகி ஜெயங்கொண்டுவாழ்ந்தாயே
மோசஞ்செய்திடகாலம் மூண்டுதோ ஐயோ அறி

காடாண்டபாண்டவர் காதாலேயிதைக்கேட்டால்
பாடாகமுடியுமே பரந்தாமாகோவிந்தா அறி

எங்களைக்காத்தாளும் யெழிலானதலங்கைவாழ்
மங்கைபங்காளனே மகாதேவாசுந்தரேசா அறி

குந்திதேவி சொல் விருத்தம்

கற்பழியாதநாளில் கதிரவர்மந்திரத்தால்
அற்புதமாயுதித்த அருமையென்மகனேகேளாய்
பொற்பெரும்பேழைதனில் பொங்கமாய்வைத்துவுன்னை
நற்பெருங்கங்கைதன்னில் நான்மூழ்கவிட்டேனப்பா.

வசனம்

இவ்விதமாக குந்திதேவியம்மாள் சொல்ல கர்னமகராசன் புலம்புகிற விதங்காண்க.

கர்னராஜன் புலம்பல் தரு ரூபகதாளம்

வந்ததென்னமோ யிந்தவிதி
வந்ததென்னமோ அம்மாயிது வந்த

மந்திரத்தாலென்னை மாதாவேஉற்பவித்து
அந்தரமாயென்னை அலையவைத்தாயே வந்த

பக்ஷமாயெனையழைத்து பாலைக்கொடுக்காமலே
இட்டவிதியுமாச்சுதே பிர்மதேவன் வந்த

அன்னியராலேவளர்ந்து அவனியையாண்டேனே
மன்னவர்க்கெல்லாம்மன்னனய் வாழ்ந்தும்மனதுகுலைந்தேனே — வந்

ஐவர்க்கும்எனக்கும்பகை மூண்டிடஅமைத்துதே
பையரவத்தால்பார்த்தனைக்கொல்ல பகையுமூண்டுதே-வந்

வாரும்எனைப்பெற்றமாதாவே எந்தன்வார்த்தையைகேளும்
கோரும்சுந்தரேசரைப்பணிந்து பால்கொடுங்குடிக்கிறேன்-வாரு

கர்னராசன் சொல் விருத்தம்

குழந்தையாயெனைவளர்த்து கொஞ்சியேசீராட்டாமல்
இழந்தையேயொருவர்கையில் யிப்போதுவந்ததாயே
பழையதோர்குருடனுக்கு பார்வையும்தந்தாப்போல
வழங்கினல்கொங்கைபால் வாகுடன்பொசிப்பேனம்மா.

(வ-ம்.) கேளும் அம்மணி தாங்கள் எனக்கு தாயானது நிச்சயமாயிருந்தால் பழைய குருடனுக்கு கண்வந்தால் எவ்வளவு சுகம் பெறுவானே அப்படிக்கு இப்போது தங்களுடைய கொங்கையில் பால் பெருகி அதை அடியேன் பொசித்தால் சுகம் பெறுவேன் அம்மணி.

குந்தியம்மன் சொல் விருத்தம்.

பால்தனைபொசியுமென்று பண்பாககுந்திதேவி
கோலமாய்வட்டில்வாங்கி குடியென்றுகீழேவைத்தாள்
மூலமதறிந்தகோமான் மோசங்கள்வந்துதென்று
பூனையாய்வடிவுகொண்டு சிவுக்கெனகவிழ்த்திட்டாரே.

வசனம்

இவ்விதமாக குந்தியம்மாளானவள் தன் கொங்கையின் பாலை தங்கக்கிண்ணத்தில் வாங்கி பொசியெனக் கீழே வைத்தாள். அதைக்கண்டு கிருஷ்ணமூர்த்தியானவர் மோசம் வந்ததென்று பூனையைப்போல்ரூபங்கொண்டு ஓடிவந்து கவிழ்த்து விட்டார் அதைக்கண்டு குந்தியம்மாள் புலம்புகிற விதங்காண்க.

குந்தியம்மாள் புலம்பல் அடதாளம்

சுந்திரசேகரா சுந்திரயீஸ்வரா மகாதேவா
மைந்தன்பொசிக்கப்பால் மனதுயில்லையோ மகாதேவா

சிந்தையிலன்புகொண்டு முந்தியேவைத்ததை மகாதேவா
அந்தரமாய்பூனை அனியாயம்செய்ததே மகாதேவா

பாலைப்பொசித்திட பாக்கியமில்லையே மகாதேவா
ஆலமுண்டஎங்கள்ஐயனேஎன்செய்வேன் மகாதேவா

ஊட்டிவளர்த்துநா னூஞ்சலிலாட்டவுமில்லையே மகாதேவா
கூட்டமாகநாங்கள் கூடிவாழவில்லையே மகாதேவா

என்னநான் செய்குவேன் எப்படியாறுவேன் மகாதேவா
சின்னவன் துயரத்தை சுந்தரரேசாரும் மகாதேவா

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இவ்விதமாக தாயார் புலம்பும் போது கர்னமகாராசன் சொல்லுகிற விதங் காண்க.

கர்னமகாராசன் சொல் தேவாரம்

பூனையும்வந்திப்போது நான்பொசித்திடுமமிர் தந்தன்னை
தானதைபொசித்திடாமல் தவிர்த்தி செய்ததென்ன
வானமட்டோங்கிநின்ற வஸ்துவேஎந்தன்யோட்டில்
ஆனையையுரித்தஎங்கள் ஆண்டவாஎழுதினையோ.

கர்னமகாராசன் சொல் அடதாளம்

பூனைவந்துமோசம்செய்து போதவேகெடுத்துதையா
மானைக்கரமேந்தும்மகாதேவா என்னசெய்வனையோ - பூ

தரணியிலிருக்கும்படிக்கு தாயறியாப்பிள்ளையுண்டோ
காரணமெனக்கிப்படி கர்த்தனேவைத்தாயோ - பூ

கற்பறியா தாளையிலே உற்பவித்தாபென்றுசொல்லி
பொற்பெரியகிண்ணமதில் பொங்கிஎதிர்வைத்தபாலை - பூ

ஐவருக்குமுன்பிறந்தும் யாருமற்றனுதையாகி
வையகத்தோரேசயென்னை வைத்தாளேபெற்றவளே - பூ

இப்படிக்கிருந்திடவே எழுதிவைத்தாயோசிவனே
அப்பனேசுந்தரேசா ஆதரிக்கவேண்டுமையா - பூ

கர்னமகாராசன் சொல் விருத்தம்

அன்னையேஎன்னைப்பெற்ற அன்புள்ளதாயேகேளாய்
முன்னமேஎன்னைப்பெற்ற மேன்மைசேர்பாண்டவாளை
தன்னையேபிரிந்துயானும் தாரணியாளுவேனே
என்னையேதேடிவந்த உன்எண்ணத்தைசொல்லுவாயே.

வசனம்

கேளுமம்மணி! நான் விசனப்படுவதி லொன்றுமில்லை. தாங்களென்னைத் தேடி வந்ததைச் சொல்லும் அம்மணி.

குந்தியம்மன் சொல் விருத்தம்

வந்தகாரணத்தைச்சொல்வேன் வன்மைசேர்மகனேகேளாய்
உந்தன்பின்பிறந்த அந்தஉயர்குலகோமானுன
சுந்தரஅர்ச்சுனன்மேல் தொடுக்குமோரரவந்தன்னை
பிந்திநீகைதொடாம லொருவரம்கேட்கவந்தேன்.

வசனம்

கேளுமென் அருமை மகனே! உன் தம்பி அர்ச்சுனன் மேல் விடும் அரவத்தை மறுகணை தொடாமல்படிக்கு வரம் கேட்க வந்தேன். அந்தப்படிக்கு எனக்கு ஒரு வரம் கொடுக்க வேணும் மகனே.

கர்னன் சொல் தரு அடதாளம்

அம்மா நீகேட்பதை இம்மானிலமறிந்தால்
அவனிபழியாதா தெரியாதா சிசியாதா எந்தன்
அன்னையே குறை சொன்னையே சொன்னையே சொன்னையே

நாதனென்றென்னையே நம்பியிருந்தோர்க்கு
நன்மொழிதப்பலாமா யிப்போதாமா செப்பலாமா இது
நன்மையா மொழி மேன்மையா மேன்மையா மேன்மையா

ஆனாலொருசேதி அன்னையேசொல்லுகிறேன்
அவரைக்கெடுக்கலாமா தடுக்கலாமா விடுக்கலாமாயிப்போ
அய்யோ நான் என்னசெய்வேன் பையரவம்வீணுதமாபோகுமா

இப்படிக்குவர மெழுதிவைத்தாரோ
ஈசனயனும்திருமாலும் கதிரோனும் இதுஎன்னமோ
எந்தன் கர்மமோ கர்மமோ கர்மமோ

மாதாகேட்டவரம் மைந்தன் தராவிட்டால்
மனதுசலியாதா மெலியாதா பலியாதா
மோசம்வந்துதேமனம் நொந்துதே நொந்துதே நொந்துதே

திங்களணிந்திடும் மங்கைபங்காளனே
தேவதேவவினோதா இதுவுன்சூதா விதிபொல்லாதா
ஓம்சேகரா சந்திரசேகரா சேகரா.

கர்னமகாராஜன் சொல் விருத்தம்

வரமதுதாருமென்று வருந்தியேஎன்னைக்கேட்ட
தருமதேவதைக்கொப்பான தாயேயுன் உரைப்படிக்கு
ஒருகணைதனக்குமேலே மறுகணைதொடுக்கேனம்மா
நருமலரணிந்தயீச நாதரறியச்சொன்னேன்.

வசனம்

கேளுமம்மணி! தாங்களென்னை கேட்டபடிக்கு நானை யுத்தத்தில் அர்ச்சுனன் மீதில் ஒரு கணைக்கு மேல் மறுகணை என் கையினால் எடுக்கிறதில்லை. இதோ நமது கடவுளாகிய சுந்தரேசரறியச் சொன்னேன். இந்த சங்கதி யாரு மறியாமல் இருக்க வேண்டும். நீர் போய்வாரும் அம்மணி, சரணம் சரணம்.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் குந்திதேவியானவள் வரம் பெற்றதை சுவாமியானவர் அறிந்துகொண்டு பாண்டவர்களிடம் வரும்போது பாண்டவாள் சுவாமியைத் துதிக்கிற விதங்காண்க.

பாண்டவர் சொல் தரு

பாதம்நொந்துதோ
பாதம்நொந்துதோ — உமது தேவபாதம்நொந்துதோ

பாதம்நோகபோனதென்ன — பாதகன்உரைசொன்னதென்ன
தாதாவேஉமக்கிடர்செய்தானோ — சபையில்சொன்னதைமறந்தானோ

குடிகேடன்சகுனியானவன் — குலத்தையழிக்கப்பிறந்தபாவி
கெடுமதிசெய்யவுமைமினைத்தானே — கேளாதகேள்வியைகேட்டானே

காளையென்தம்பிமார் — கருத்துக்கிசைந்தாரோ
பாளையம்வந்தால்பார்த்துக்கொள்வோ — மென்றுபகடிசெய்தாரோ

பீஷ்மர்துரோணர்அஸ்வத்தாமர் — பெரியோர்முன்பாக
சாட்சியாகவேசொன்னவசனத்தை — சற்றுமறந்தானோ

எங்களைரட்சித்தயெட்டாதபொருளே — இணையடிபோற்றினேன்
மங்களமாகவேமுருகன்பாடும் — மலரடித்தேவனே-பாதம்

தருமர் சொல் விருத்தம்

எங்களுக்குரியநாட்டை எழிலாககேட்பதற்காய்
தங்கள்பொற்பாதம்நோக தாயாதிவிடமேசென்றீர்
பொங்மாய்போனதென்ன பூமிக்காய்சொன்னதென்ன
மங்கைபங்களாயிப்போ மகிழ்பெறச்சொல்லுவாயே.

வசனம்

சரணம் சரணஞ் சுவாமி கர்த்தனே தாங்கள் என்னைக் குறித்து தங்களுடைய பாதம்நோக போனயிடத்தில் துரியோதனன் தங்களுடைய மனம்நோகும்படி செய்தானோ அல்லது இஷ்டம்போல் செய்தானோ சுவாமி கர்த்தனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்

போனதோர்வேலை புகலுவேன்கேளீர்
பெருமைசேர் தர்மபுத்திரரே
கானகமோடி பிழைத்தவர்தமக்கு
கால்வைக்கயிடமது கொடுக்கேன்

மானமுள்ளவரேயானுலும் நாளை
மல்லுக்குவரச் சொல்லென்ருன்
ஆனதாகட்டுமென்று யெண்ணி
அவனிடம்கைதட்டி வந்தேன்.

வசனம்

கேளும் தர்மபுத்திரரே நான் போய் உங்களுடைய தாயாதி பக்ஷத்தைக்கேட்டால் அவன் உங்களுக்கு இந்த பூமியிலேயிருக்க இடங்கொடுக்கேன் அவர்கள் பேச்சு பாராய்விட்டது வல்லமையிருந்தால் யுத்தஞ்செய்து பெற்றுக்கொள்ளுமென்ருன். ஆகையால் பார்ப்போமென்று கை தட்டி வந்தேன் காணும் தர்ம புத்திரரே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

ஆனல் இனி நடக்கவேண்டிய காரியத்தை யோசிப்போம் நீங்கள் உபலாவியம் போய் சேருங்கள் நான் துவாரகைக்குப் போய் வருகிறேன் காணும் சகாதேவ ராசனே.

சகாதேவன் சொல் வசனம்

அப்படியே போய்வாருஞ் சுவாமி கர்த்தனே.

பொது வசனம்

அகோதெப்படி யென்ருல் இந்த கிருஷ்ணன் தூது நாடகத்தை நூதனமாக செய்தவன் தலங்கையில் வாழா நின்ற வைசியகுலத்திலவதரித்த முருகேசனென்பவன். இந்நாடகத்தை பெரியோர்கள் மறையோர்கள் புலவர்கள் யாவரும் இதை பரிசோதித்து இதிலுள்ள பிழைகளை திருத்தி வைப்பது மல்லாமல் அடியேனுக்கு யாவரும் ஆசீர்வாதஞ் செய்யக்கடவது.

ஸ்ரீ மகாபாரதத்தில் ஓர் பிரிவாகிய

கிருஷ்ணன் தூது நாடகம்

முற்றுப்பெற்றது.

திருமகள் அச்சகம், சென்னை—1. 1979

புத்தக விளம்பரம்

—✻—

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்

விலை ரூ. 40—00

பெரிய எழுத்தில் ராயல் 1×8 அளவில் 1490-பக்கங்கள் கொண்டது; 7-காண்டங்கள் 2-வால்யம், 18-ஆப்டோன் படங்களுடன் அச்சிடப்பட்டு உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

"நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழியவாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே"

கம்பர் வாக்கு.

ஸ்ரீராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம்; இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடைவிக்கும், இலக்குமி கடாக்ஷ முண்டாக்கும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு பால் தானியம் முதலியன விர்த்தியாகும்: பில்லி சூனியம் தீராத நோய் பூத பைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷ ஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்லமழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்த முண்டாகும்; இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பலன்கள் உண்டாகி யிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்தில் உணர்ந்து கொள்ளலாம்.

ஸ்ரீமத் பகவத் கீதை

விலை ரூ. 3—00

இதில், தமிழில் ஸ்லோகமும், ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ ராமச்சந்திராநந்த சரஸ்வதி சுவாமிகளால் இயற்றிய தெளிவான தாத்பரியத்துடன் கூடியது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தி லச்சிடப்பட்டு காலிகோ கட்டடம் செய்துள்ளது. ஸ்ரீமத் பகவத்கீதையை பாராயணம் செய்பவர்களுக்கும் உபயோகமாம் பொருட்டு பாக்கெட் அளவில் வெளியிடப்பட்டிருக்கிறது.